Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹ:.தா 15 (08.01.2004) வியாழக்கிழமை இதழ் :99

புதிய
ராசி சில்க்ஸ்
70, 71 A, நவீன சந்தை (உட்புறம்) , யாழ்ப்பாணம்.
கல்யாணப்பட்டுப் புடவைகளின் கைராசி நிறுவனம்
☆ திருமணப் பட்டுச் சாறிவகைகள்
☆ சோளி கிற்
☆ சேட்டிங்
☆ ஸ்கேட் & பிளவுஸ்
☆ கவுண்
☆ சல்வார் கிற்
☆ இந்தியன் சாறி வகைகள்
☆ பேபி சூட்
☆ சிறுவர் சிறுமியருக்கேற்ற றெடிமேட் ஆடைகள்
மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் வருகை தாருங்கள்

## சமாதான முயற்சியுடன் அகாஷி வருகிறார்!

(கொழும்பு)

அரசியல் நெருக்கடியினை நீக்குவது தொடர்பான உயர்மட்டச் சந்திப்புக்களை நடத்துவதற்காக ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி, வரும் 19 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் ரோக்கியோ மாநாட்டில் பங்கு பற்றி இலங்கைக்கு நிதியுதவி வழங்க உறுதியளித்த நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டத்திற்கும் இவர் சமுகமளிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு வரும் அகாஷி, ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசியற்கட்சித் தலைவர்களையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல் நெருக்கடிகளைத் தீர்க்க

# அமெரிக்க அதிகாரிகள் குழு கொழும்பிற்கு வரவுள்ளது!

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக - சகல அதிகாரங்களையுமுடைய ஐந்து பேரடங்கிய அமெரிக்க அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வரவுள்ளது.

ஜேமி மாகோனி தலைமையில் ஐவர் அடங்கிய குழுவினரே இந்த மாத நடுப்பகுதியில் கொழும்பு வரவுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையே ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியை இனங்கண்டு, அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வதே இவர்களின் நோக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கையில் அரசியல் நெருக்கடி தொடர்வதை அனுமதிக்கமுடியாதெனவும், அவற்றை உடனடியாகத் தீர்த்து விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சை முன்னெடுக்க வேண்டுமெனவும் அமெரிக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடனான போர்நிறுத்தம்; விலகிக்கொள்ள பிரதமர் முடிவு!

## சமாதான முயற்சிகளில் பாரிய நெருக்கடி



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர்நிறுத்தத்தில் இருந்து இந்த மாதத்துடன் விலகிக் கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருப்பதாக நம்பகமான வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவித்தன.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தமது நெருங்கிய உதவியாளர்களிடம் இந்த தகவலை உத்தியோகபூர்வமாக அறிவித்ததாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் மாலை தமது நெருங்கிய ஆலோசகர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னரே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த முடிவை எடுத்ததாகத் தெரியவருகிறது.

பாதுகாப்பு அமைச்சு அரசாங்கத்திடம் இல்லாத நிலையில் போர்நிறுத்த உடன்பாட்டை அமுல்செய்வதில் சிக்கல்களை எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த முடிவை எடுத்ததாகவும், தனது இந்த முடிவு குறித்து நோர்வே ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஜரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளுக்கு அரசாங்கம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அரசாங்கத்துக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் எடுத்திருக்கும் தீர்மானம் பேரதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது!

### நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர்



(திருகோணமலை)

சமாதான முயற்சியிலிருந்து விலகுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளமை பேரதிர்ச்சியை ஏற்படுத்துகிறது என நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் காமினி றொட்றிக்கோ தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது. -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணிலின் அறிவிப்பு பொறுப்பேதுமற்ற முடிவாகும்!

### எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

விடுலைப் புலிகளுடன் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து விலகப்போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருப்பது பொறுப்பற்ற செயல் என எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவரது உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக வெளியிட்ட செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மக்கள் ஆணை தனக்குக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை பிரச்சினை தொடர்பான இந்திய நிலைப்பாட்டில் மாற்றம்!

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய சமாதான முயற்சிகளில் இந்தியாவும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு நாடு திரும்பும் முன் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தியாவும், இலங்கையும் பாதுகாப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடுவதன் மூலம் இருநாடுகளுக்குமிடையில் உறவுகளை அதிகரிக்கலாம்.

இந்தக் கூட்டு ஒப்பந்தத்திற்கான முயற்சிகள் தற்போது இருநாடுகளுக்குமிடையில் வளர்ந்து வருகிறது. எமது படையினருக்கு ஆயுதப் பயிற்சிகளையும், இந்தியா வழங்கி வருகின்றது. இந்தக் கூட்டு ஒப்பந்தம் தொடர்பான கலந்துரையாடல் விரைவில் நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்தியாவும் இலங்கையும் இரு நாட்டு உறவுகளில் பலவழிகளிலும் முன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோசப் கோரிக்கை

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யும் எந்தவொரு நடவடிக்கையிலும் சிங்கள அரசியல்வாதிகள் ஈடுபடக்கூடாது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு நேற்று அவர் அளித்த செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

பாதுகாப்பு அமைச்சு அரசாங்கத்தின் கீழ் இல்லாமல் சமாதான முயற்சியை முன்னெடுப்பது முடியாத காரியம். எனினும் பிரதமர் சமாதான முயற்சியைக் கைவிடும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது அவ்வாறு செய்தால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா பிறிமா நிறுவன களஞ்சியத்தில் 5 நாட்களாக தவங்கிடக்கும் லொறிகள்!

பிறிமா நிறுவனத்தின் வவுனியாவில் உள்ள பிராந்திய களஞ்சியத்திற்கு மாவுக் கொள்வனவுக்காக ப.நோ.கூ.சங்க லொறிகள் கடந்த முதலாம் திகதி அனுப்பப்பட்ட போதிலும் இன்றுவரை மாவு ஏற்றப்படாமல் 05 நாட்களாக காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் திருகோணமலை பிறிமா நிறுவனத்தின் களஞ்சியத்தில் மாவு பெற்றுவரும் பொழுது எத்தகைய தடங்கலுமின்றி கூட்டுறவுச் சங்கங்கள், மக்களுக்குத் தேவையான மாவைப் பெற்று வழங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர், வவுனியாவிலுள்ள பிராந்திய களஞ்சியத்திற்கு யாழ்.மாவட்டத்திற்கான மாவு விநியோகம் மாற்றப்பட்டதும். கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாவு வழங்கலில் மெத்தனப் போக்கே கடைப்பிடிக்கப்படுகிறது.

இவ்விடயமாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வடக்கு - கிழக்கு, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும், ப.நோ.கூ.சங்கங்கள் தமது நிலைப்பாட்டை கடிதமூலம் தெரியப்படுத்தியுள்ளன. அத்துடன், யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுச் சபைப் பிரதிநிதிகளால் சங்கங்களுக்கு தேவையான மாவை தொடர்ந்தும் திருகோணமலையிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், இல்லையேல் வேறு பொருத்தமானதொரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்

# ஆளணிப் பற்றாக்குறையால் பாரிய நெருக்கடிகள்

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இடநெருக்கடி, ஆளணிப் பற்றாக்குறை மற்றும் வளங்கள் இன்மையால் பாரிய நெருக்கடியை சந்தித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அதற்கு ஏற்ற அளவில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் நோயாளர் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கான விடுதிகள் பற்றாக்குறையாக உள்ளதாகவும கூறப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு அம்புலன்ஸ் வண்டி மாத்திரம் உள்ளதால்- மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்களை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்வதில் பெருஞ்சிரமங்கள் ஏற்படுவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன

(122)

# நெல்லியடியை அண்டிய பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு!

நெல்லியடி அயல் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டேபோகிறது. குறிப்பாக கரவெட்டி மேற்குப் பகுதியில் சன நடமாட்டம் குறைவான இடங்களில் திருடர்கள் திட்டமிட்டுக் களவாடுவதைத் தடுக்க முடியவில்லை. பகல், இரவு பாராது துணிந்து கொள்ளையிடும் கூட்டம் பெருகிக்கொண்டு போவதால் பெண்கள் வீதியில் நடமாட அஞ்சுகிறார்கள்.

நேற்றுமுன்தினம் கரவெட்டி முகாவில் பகுதியைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி ஆலோசகர் மங்களம் நடராசா என்பவரின் கழுத்துச் சங்கிலியை அவர் கடைக்குச் சென்று கொண்டிருந்த ஒரு ஒழுங்கையில் வைத்துத் திருடர் அபகரித்துச் சென்றுவிட்டனர்.

இதேபோன்று சில நாட்களுக்கு முன் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஒரு உத்தியோகத்தரின் தாலிக்கொடி - கடமைக்குச் சென்றவேளை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர். இப்படிப திருட்டுச் சம்பவங்கள் தொடர்கின்றன.

## வடமராட்சி கிழக்கு

# உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1728 வீடுகள் முற்றாகச் சேதம்!

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மக்கள் மீளக குடியமர்ந்த செம்பியன் பற்று தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான 10 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 1728 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் 1009 வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளதாகவும், உதவி அரச அதிபர் வட்டாரங்கள் தெரிவித்தன.

மீளக்குடியமர்ந்த வீட்டு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு தொண்டர் நிறுவனங்களான 'நிகொட்', ஜி.ரி.இசற், யூ.என்.எச்.சி.ஆர். என்பன முன்வந்துள்ளன.

நிகொட் நிறுவனம் 125 வீடுகளையும், ஜி.ரி.இசற் நிறுவனம்175 வீடுகளையும், யூ.என்.எச்.சி.ஆர் என்பன 120 வீடுகளையும் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளபோதும் புனரமைப்பு வேலைகள் மிகவும் மந்த நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

(122)

# மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து எழுச்சிப் பேரவை செயற்படவேண்டும்!

## யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர்

(கொக்குவில்)

தேச விடுதலைக்காக போராடுகின்ற மக்களின் உணர்வுக்கு மதிப்பளித்து தேசிய எழுச்சிப்பேரவை செயற்படவேண்டும் என யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

தேசிய எழுச்சிப்பேரவையின் மாவட்ட செயற்குழுக்கூட்டம் மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரை வழங்குகையில் தேசிய எழுச்சிப்பேரவையின் உறுப்பினர்கள் சுயநலன் கருதாது பொதுநலத்தில் அக்கறை கொண்டவர்களாக செயற்படவேண்டும். அர்ப்பணிப்புடன் மக்களுக்கு தொண்டாற்ற முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் 2004ம் ஆண்டிற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு வேலைத்திட்ட செயற்பாடுகள் தயாரிக்கப்பட்டன. இந்தக்கூட்டத்தில் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், தேசிய எழுச்சிப்பேரவை கோட்ட இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடமராட்சி வலயப் பாடசாலைகளின் விஞ்ஞான வினாடிவினாப் போட்டி முடிவுகள்

(ஆழியவளை)

வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற விஞ்ஞான வினாடிவினாப் போட்டிகளில் கோட்ட மட்டத்திலும், வலய மட்டங்களிலும் வெற்றியீட்டி பரிசில்கள் பெறும் பாடசாலைகளினதும், கோட்டமட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவர்களின் விபரங்களும் வலயக் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்டுள்ளன.

**பருத்தித்துறைக் கோட்டம்.**

**தரம் - 7**

முதலாம் இடம் - ஹாட்லிக் கல்லூரி, இரண்டாம் இடம் - மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, மூன்றாம் இடம் - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**தரம் - 8**

முதலாம் இடம் - ஹாட்லிக் கல்லூரி, இரண்டாம் இடம் - வட. இந்து மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம் - மெதடிஸ்த பெ.உ.பாடசாலை,

**தரம் - 9**

முதலாம் இடம் - மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, இரண்டாம் இடம்- ஹாட்லிக் கல்லூரி, மூன்றாம் இடம்- தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

**தரம் - 10**

முதலாம் இடம் - மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, இரண்டாம் இடம்- ஹாட்லிக் கல்லூரி, மூன்றாம் இடம்- வட.மத்திய மகளிர் கல்லூரி.

**தரம் - 11**

முதலாம் இடம் - ஹாட்லிக் கல்லூரி, இரண்டாம் இடம் - மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, மூன்றாம் இடம் - பொலிகண்டி இ.த.க.பாடசாலை.

கூடுதல் புள்ளிகள் பெற்றதற்கான சிறப்புப் பரிசுகள்

**தரம் - 7**

சி.செந்தூரன் - தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை, இ.மயூரன் - கலட்டி றோ.க.த.க.பாடசாலை, நிலுசியா - புற்றளை மகா வித்தியாலயம், ர.கிருபாகரன் - பொலிகண்டி இ.த.க. பாடசாலை.

**தரம் - 8**

கௌசல்யா - தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சி.சிவரஞ்சன் - அல்வாய் அம்பாள் வித்தியாலயம்

**தரம் - 9**

த.திவாகரன் - தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை, வே.பிறேம்குமார் - வேலாயுதம் மகா வித்தியாலயம்.

**தரம் - 10**

விஜிதா - தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், கிருஜா- தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சி.தனுஷன் - பொலிகண்டி இ.த.க.பாடசாலை.

**தரம் - 11**

யோ.சரஸ்வதி - பொலிகண்டி இ.த.க.பாடசாலை, வி.கலைப்பிரியா- புற்றளை மகா வித்தியாலயம், செ.திருக்குமரன் தொண்டமானாறு வீ.ம. வித்தியாலயம்.

**கரவெட்டிக் கோட்டம்**

**தரம் - 7**

முதலாம் இடம் - வல்வெட்டி இ.த.க.பாடசாலை, இரண்டாம் இடம்- விக்னேஸ்வராக் கல்லூரி, மூன்றாம் இடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**தரம் - 8**

முதலாம் இடம் - வல்வெட்டி இ.த.க. பாடசாலை, இரண்டாம் இடம் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, மூன்றாம் இடம் - வட.மத்திய மகளிர் கல்லூரி.

**தரம் - 9**

முதலாம் இடம் - விக்னேஸ்வராக் கல்லூரி, இரண்டாம் இடம் - வல்வெட்டி இ.த.க.பாடசாலை, மூன்றாம் இடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**தரம் - 10**

முதலாம் இடம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இரண்டாம் இடம் - வட.மத்திய மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**தரம் - 11**

முதலாம் இடம் - விக்னேஸ்வராக் கல்லூரி, இரண்டாம் இடம் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, மூன்றாம் இடம்- வட. மத்திய மகளிர் கல்லூரி.

**கூடுதல் புள்ளிகள் பெற்றதற்கான சிறப்புப் பரிசு பெற்றவர்கள்**

**தரம் - 7**

ஏ.நிதர்சன் - விக்னேஸ்வராக் கல்லூரி, த.கோபாலகிஷ்ணன் - இமையாணன் அ.த.க.பாடசாலை, இ.சிவசங்கர் - கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்.

**தரம் - 8**

வதனகுமாரி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பிரசாந்தினி- வட. மத்திய மகளிர் கல்லூரி.

**தரம் - 9**

திவ்யவந்தி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஜீவனா - ஞானாசாரியார் கல்லூரி, விஜிதா - தேவரையாளி இந்துக் கல்லூரி.

**தரம் - 10**

நிரோஷா - கரணவாய் மகா வித்தியாலயம், ரமணகாந் - கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்.

**தரம் - 11**

குருப்பிரியா - வதிரி திரு இருதயக் கல்லூரி, அபிராமி - கரணவாய் மகா வித்தியாலயம், சௌமியா - தேவரையாளி இந்துக் கல்லூரி, சங்கீதா - கம்பர்மலை அ.த.க.பாடசாலை, பாலகுமார் - ஞானாசாரியார் கல்லூரி,

**மருதங்கேணி கோட்டம்**

**தரம் - 7**

முதலாம் இடம் - உடுத்துறை மகா வித்தியாலயம், இரண்டாம் இடம் - மருதங்கேணி இ.த.க.பாடசாலை, மூன்றாம் இடம் - குடத்தனை அ.த.க.பாடசாலை.

**தரம் - 8**

முதலாம் இடம் - அம்பன் அ.மி.த.க.பாடசாலை, இரண்டாம் இடம்- மருதங்கேணி இ.த.க.பாடசாலை, மூன்றாம் இடம் - நாகர்கோயில் மகா வித்தியாலயம்.

**தரம் - 9**

முதலாம் இடம் - நாகர்கோயில் மகா வித்தியாலயம், முதலாம இடம்- நாகர்கோயில் மகா வித்தியாலயம், மூன்றாம் இடம் - செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை.

**தரம் - 10**

முதலாம் இடம் - ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, இரண்டாம் இடம் - குடத்தனை அ.த.க.பாடசாலை, மூன்றாம் இடம் - அம்பன் அ.மி.த.க.பாடசாலை.

**தரம் - 11**

முதலாம் இடம் - உடுத்துறை மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்- மருதங்கேணி இ.த.க.பாடசாலை, மூன்றாம் இடம் - நாகர் கோயில் மகா வித்தியாலயம்.

**கூடுதல் புள்ளிகள் பெற்றதற்கான சிறப்புப் பரிசு பெறுவோர்**

**தரம் - 7**

அருள்தீபன் - உடுத்துறை மகா வித்தியாலயம்.

**தரம் - 9**

சஜிதரன் - ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை.

**தரம் - 10**

த.கபில் - ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை.

**தரம் - 11**

செ.நிவாஸ் - மருதங்கேணி இ.த.க.பாடசாலை, து.பிரயதர்சினி - செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை, லோ.கனிமொழி - அம்பன் அ.மி.த.க.பாடசாலை.

**வலயமட்டம்**

**தரம் - 7**

முதலாம் இடம் - விக்னேஸ்வராக கல்லூரி, இரண்டாம் இடம் - வல்வெட்டி இ.த.க.பாடசாலை, மூன்றாம் இடம் - ஹாட்லிக் கல்லூரி.

**தரம் - 8**

முதலாம் இடம் - வட.இந்து மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, மூன்றாம் இடம் - மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை.

**தரம் - 9**

முதலாம் இடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம்- ஹாட்லிக் கல்லூரி, மூன்றாம் இடம்- மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

**தரம் - 10**

முதலாம் இடம் - மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, இரண்டாம் இடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம் - ஹாட்லிக் கல்லூரி.

**தரம் - 11**

முதலாம் இடம் - வட.மத்திய மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம்- விக்னேஸ்வராக் கல்லூரி, மூன்றாம் இடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

(122)


**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்
விஜய், ஜோதிகா, ரகுவரன், கௌசல்யா நடித்த **திருமலை**
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, (பு.நே)
அடுத்த வெளியீடு
வம்சி, முகேஸ் நடித்த
**கொஞ்சிப்பேசலாம்**
(சி-2005)

**விற்பனைக்கு**

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களும, பான்சி பொருட்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். Telesonic, Rikon, Pacific, Usha, Sunda வகையில் Fans, Gas Cooker, Blenders, Clocks, Rice Cookers, Food jars, Ceiling Fans, Thermos china Flask இன்னும் பல தரப்பட்ட உபகரணங்களும் உண்டு.
**RAJU STORES**
67, 69 Kasthuriar Road, Jaffna.
T.P. 222 5224 Fax. 2225224
(சி-2060)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சூர்யா, ஜோதிகா நடித்த
**காக்க காக்க**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
**KEOMA**
(சி-2004)

# வீடு விற்பனைக்கு

நந்தாவில் அம்மன் கோவிலுக்கு முன்பாக 4 பரப்புக் காணியில் 3500 சதுர அடி கொண்ட பெரிய வீடும் உடன் விற்பனைக்குண்டு.
*தொடர்பு:*
**வதனா களஞ்சியம் (செந்தில் கடை)**
நந்தாவின் அம்மன் கோவில் முன்பாக (சி-2059)


# நன்றி கூறுகின்றோம்



**இந்து சமய விவகார அமைச்சர், மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் நெல்லியடி திரு இருதயக் சனசமூக நிலையத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக முப்பத்தையாயிரம் ரூபா (35,000/-) பெறுமதியான கூரைத்தகடுகள், சீமெந்து ஆகியவற்றை தாராள மனத்துடன் தந்துதவியமைக்காக எமது நிலையத்தின் சார்பாக இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.**

நிர்வாகம்,
திரு இருதய சனசமூக நிலையம், நெல்லியடி.
(581)


## சிறு விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

மெமோறியல் லேன் மானிப்பாயிலுள்ள எலிம் சிறுவர் இல்லத்துக்கு அருகாமையில் வைரவர் கோவிலோடு சேர்ந்த 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சுரேஸ்குமார் - 077 6100822 (575)

# பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்து இறுதிமுடிவு இன்னும் எடுக்கப்படவில்லை!

## மலிக் சமரவிக்கிரம தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பான அதிகாரிகள் மட்ட குழுவின் பேச்சுக்களை மீண்டும் எப்போது ஆரம்பிப்பது என்பது குறித்து இதுவரை இறுதி முடிவெதுவும் எடுக்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளருமான மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையினை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை. குழுவில் ஜனாதிபதியின் சார்பில் அங்கம் வகிக்கும் பிரதிநிதியான மனோ தித்தவெல வெளிநாட்டில் தங்கியுள்ளார். இதனால் எப்போது பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பது என்பது தொடர்பில் முடிவு எதுவும் எடுக்கவில்லை என்றும் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண அமைக்கப்பட்ட அதிகாரிகள் மட்டக்குழு பல தடவைகள் சந்தித்துப் பேசியபோதும் உருப்படியான முடிவுகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# பிரிட்டனின் வர்த்தக தூதுவர் அமைச்சர் பீரிசுடன் சந்திப்பு!



(கொழும்பு)

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டனின் வியாபாரத்துக்கான வருகைத்தூதுவர் சுவராஜ் போலபிரபு, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் குறித்தும், அரசியல் நிலைவரம் குறித்தும் அரசாங்கப் பேச்சாளரும், நீதி அரசியல் அமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரி ஸுடன் பேச்சுநடத்தினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தப் பேச்சுக்கள், இருவருக்கும் இடையிலான தனியான சந்திப்பாக மூடிய அறைக்குள் இடம்பெற்றது.

இந்தப் பேச்சுக்கள் குறித்து, கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பிரிட்டனின் வர்த்தகத் தூதுவர், இலங்கையில் அமைதி நிலவுவதற்காக அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதாக உறுதியளித்தார்.

பிரிட்டன் முதலீட்டாளர்கள் தற்போது தற்காலிகமாக, இலங்கையில் முதலிடுவதைத் தவிர்த்துக்கொண்டிருக்கின்றாரே தவிர, முற்றாக இந்த நடவடிக்கையிலிருந்து விலகிவிடவில்லை என்று தெரிவித்ததாகவும் பீரிஸ் தெரிவித்தார்.

வர்த்தக தூதுவர் சுவராஜ் போல் பிரபு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

## அடிப்படை உரிமைமீறல் வழக்குகளில்

# ஐந்து இலட்சம் ரூபாவை நஷ்டஈடாக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியது

(கொழும்பு)

மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறியதான குற்றச்சாட்டுக்களுக்காக, கடந்த வருடம் பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுவினால் ஐந்து லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டதாக தெரியவருகிறது.

'இசற் ஸ்கோர்' முறைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட இரண்டு வழக்குகள் மீதான தீர்ப்பின் அடிப்படையிலேயே, இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய உயர்நீதிமன்ற அமர்விலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் 'இசற் ஸ்கோர்' முறையால் பாதிக்கப்பட்ட 22 மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அழைக்கும்படியும் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய கணக்காய்வு சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில்!

## அமைச்சர் லொக்கு பண்டார

(கொழும்பு)

தேசிய கணக்காய்வு சட்டமூலம் ஒன்றை நடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக, நீதி அமைச்சர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்தார். பொதுச்சேவையில் தூய்மையைப் பேணுவதற்காகவே இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பு நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இலங்கை கணக்காய்வுசேவை தொழிற சங்கத்தின் 50 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசும்போதே, அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த விடயம் குறித்து, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டதுடன், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் முழுமையான ஆதரவுடன் சட்டமூலத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

அசிற் வீச்சுக்குள்ளாகிய கணக்காய்வு அத்தியட்சகர் லலித் அம்பன் விலவுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, இந்தக் கூட்டத்தில் கணக்காய்வாளர் நாயகம் ஏ.சி.மாயாதுன்ன, இலங்கை கணக்காய்வு சேவை தொழிற்சங்கத் தலைவர் கே.ஏ.ஜெயசூரிய மற்றும் செயலாளர் ரி.சுரவீர ஆகியோர் நீதி அமைச்சரிடம் கோரிக்கைவிடுத்தனர்.

குறைந்தது 10 மில்லியன் நஷ்டஈடு லலித் அம்பன்விலவுக்கு வழங்க வேண்டும் என்று, அவர்கள் கேட்டுக்கொண்டனர். இந்த விடையங்களை ஆராய்ந்து நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் உதவியுடன் இந்த சட்டத்தை நிறைவேற்று முயற்சி செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் நடத்த இணங்கினால் சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி!

## விமல்வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

நாடாராளுமன்ற பொதுத் தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என ஜே.வி.பி.யின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக தெரியவிக்கப்படுகின்றது.

அவ்வாறு நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டால் மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடனான உடன்படிக்கை சாத்தியப்படும் எனவும் விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியதாகவும் செய்திகள்தெரிவிக்கின்றன.


ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இஸ்லாமாபாத்திற்கு விஜயம் செய்வதற்கு முன்னர் விமல் வீரவன்ச ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த சந்திப்பில் ஜே.வி.பி.யின் பொது செயலாளர் ரில்வின் சில்வாவும் கலந்துகொண்டார்.

மாகாண சபைத் தேர்தலை பின் போட்டுவிட்டு நாடாளுமன்றத் தேர்தலையே முதலில் நடத்த வேண்டும். அதற்கான கள நிலைவரங்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் ஜே.வி.பி. க்கும் சாதகமாக இருப்பதாக விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதையே ஜே.வி.பி உறுப்பினர்கள் விரும்புகின்றனர். அவ்வாறானதொரு நிலையிலேதான் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடனான உடன்படிக்கைகள் சாத்தியப்படும் எனவும் ஜே.வி.பி.யின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கருத்துக் கூறியிருப்பதாகவும் விமல் வீரவன்ச எடுத்துக் கூறியுள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டு ஜே.வி.பி.யின் ஆதரவுடன் பொ.ஐ.மு. ஆட்சி அமைக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் சமாதானப் பேச்சுவார்த்தையை நிபந்தனைகளின் அடிப்படையில் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் ஆதரவு வழங்குவதாகவும் விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் கூறியிருப்பதாக தெரியவருகின்றது.



இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் சார்க் மாநாடு இந்த நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகா, பாகிஸ்தான் பிரதமர், வங்களாதேஷ் பிரதமர் ஆகியோரை படத்தில் காணலாம்.

# பௌத்த மதத்தினர் வேறுமதத்திற்கு மாற்றம்; எதிர்த்து பௌத்த உபதேச சபை அமைப்பு!

பௌத்த மதத்தவர்களை வேறு மதங்களுக்கு மாற்றுவது தொடர்பான கருத்துக்களுக்கு எதிராக பௌத்த உபதேச சபை மாமண்டலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பௌத்த விவகார அமைச்சர் லொக்கு பண்டார இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

31 பிக்குமார் இந்த சபையில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். கங்கொடவில தேரர் இறந்ததன் பின்னர் பிக்குமார் சேர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தனர்.

அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பௌத்த சமயத்திலிருந்து விலகுவோருக்கு எதிராக நடாளுமன்றத்தில்சட்டம் ஒன்று கொண்டு வரப்படவேண்டும் என, அவர்கள் கோரியிருந்தனர்.

இந்த கோரிக்கையின் அடிப்படையில் பௌத்தவிவகார அமைச்சர் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்திருந்தார். 14 நாட்களுக்குள் பௌத்த சமாசங்களில் இருந்து விலகுவோருக்கு எதிராக நடவடிக்கை கொண்டு வருவதாகவே உறுதிவழங்கப்பட்டது.

இதனடிப்படையில், தற்போது இந்த சபை அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 60 நாட்களுக்கு உள்ளாக இந்த சபை பௌத்த ஆச்சிரமங்களிலிருந்து ஏனைய மதங்களுக்கு செல்வோரை தடுப்பதற்குரிய சட்ட நகல் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்காகதயாரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (01)

# யூரியா உரத்துக்கான மானியம் அரசாங்கத்தால் அதிகரிப்பு!

விவசாயிகளுக்கான உரமானியங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக, செயற்கை பசளைச் செயலகம் அறிவித்துள்ளது.

உலகச் சந்தையில் உரத்தின் விலை அதிகரிக்கப்பட்ட நிலையிலும், இலங்கை விவசாயிகளின் நன்மைகருதி உரமானியம் வழங்கும் நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது என, செயற்கைப்பசளைச் செயலகப் பணிப்பாளர் டிஆர்.விஜயரத்தின தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில் -

இலங்கையில் ஒரு தொன் உரத்துக்கு மானியமாக ரூபா 6 ஆயிரம் வழங்கப்பட்டது. தற்போது உரத்துக்கு மானியம் அதிகரிக்கப்பட்டமையால் ரூபா 9 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள் ளது. இதன்படி 50 கிலோ உரத்திற்கு உரமானியம் அதிகரிக்கப்பட்டமையால் ரூபா 150 விலை குறைக்கப்படும்.

வருடம் தோறும் விவசாயிகளின் பயன்பாட்டுக்கு 550 ஆயிரம் மெற்றிக்தொன் உரம் தேவைப்படுகின்றது. இதில் 300 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியாவாக காணப்படுகின்றது.

உலக சந்தையில் உரத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு தொன்உரத்தின்விலை 150 டொலராக இருந்தது. தற்போது 210 டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உலக சந்தையில் உரத்தின்விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் இலங்கையில் உரமானியம் வழங்கும் செயற்பாடுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

விவசாயகளின் நன்மை கருதியே இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுவதாகவும் அதிகளவிலான விளைச்சலை, பயன்களைப்பெறுவதே இதன் நோக்கம் என, பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# தரம் 1 இல் 3 இலட்சம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்!

இந்த வருடம் தரம்ஒன்றில் சுமார் மூன்று லட்சம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடம் கல்வித்துறையில், பல அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், ஆங்கிலத் தகவல் தொழில் நுட்பம் கூடுதலாக அறிமுகப்படுத்தப்படவிருப்பதாகவும்,

மேலும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களுக்கு இவ்வாண்டு முதல் காலை உணவு வழங்கத்திட்டமிட்ப்பட்டுள்ளதாகவும், கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை - பல்கலைக்கழக கல்வி முறையிலும் கிராமியப் பாடசாலைகளின் கல்வித்தரத்தையும் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய - அவுஸ்ரேலிய தொடரில்

# அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றி அனில் கும்ளே முதல் இடத்தில்!



(சிட்னி)

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான 4 டெஸ்ட் போட்டித் தொடர் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்தது. இதில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இந்திய வீரர் கும்ளே முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவர் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 206.1 ஓவர்கள் பந்துவீசி 710 ஓட்டங்களைக் கொடுத்து 24 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். சராசரி 29.58 ஆகும். 141 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதே சிறப்பான பந்துவீச்சாகும். 3 முறை 5 விக்கெட்டுக்கு மேல் எடுத்துள்ளார்.

பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்டில் கும்ளே சேர்க்கப்படவில்லை. அந்த டெஸ்டிலும் ஆடியிருந்தால் அதிக விக்கெட்டுக்களை எடுத்திருப்பார்.

2 ஆவது டெஸ்டில் இந்தியாவின் வெற்றிக்கு காரணமாக இருந்த அகர்கர், 16 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இரண்டாம் இடத்தைப் பிடித்தார். 41 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதே அவரின் சிறப்பான பந்துவீச்சாகும்.

அவுஸ்ரேலிய அணி சார்பில் - மெக்கில் 14 விக்கெட்டும், 3 டெஸ்ட் போட்டிளில் விளையாடிய ஜிலெஸ்பி 10 விக்கெட்டுக்களையும், பிரட் லீ (2 டெஸ்ட் மட்டும்) 8 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

துடுப்பாட்டத்தில் அவுஸ்ரேலிய வீரர் ரிக்கி பொண்டிங் முதலிடத்தைப் பிடித்தார். அவர் 4 டெஸ்டில் 706 ஓட்டங்களைக் குவித்தார். சராசரி 100.85 ஆகும். அதிகூடிய ஓட்டமாக 257 ஓட்டங்களை எடுத்தார். அவர் இரண்டு இரட்டைச் சதங்களை அடித்தார். இரண்டு அரைச் சதங்களையும் பெற்றார்.

இந்திய வீரர் ராகுல் டிராவிட் 619 ஓட்டங்கள் எடுத்து 2 ஆம் இடத்தைப் பிடித்தார். சராசரி 123.80 ஆகும். அதிகபட்சமாக 233 ஓட்டங்களை அடித்தார். ஒரு இரட்டைச் சதமும், 3 அரை சதமும் அடித்தார்.

லக்ஸ்மன் 4 டெஸ்ட் போட்டிகளிலும் 7 இனிங்சில் விளையாடி 494 ஓட்டங்கள் எடுத்து 3 ஆவது இடத்தைப் பெற்றார். சராசரி 82.33 ஆகும். அதிகபட்சமாக 178 ஓட்டங்களை எடுத்தார்.

ஷேவாக் 464 ஓட்டங்களை எடுத்து 4 ஆவது இடத்தைப் பிடித்தார். அவர் அதிகபட்சமாக 195 ஓட்டங்களை எடுத்தார். அடுத்தபடியாக ஹைடன் 451 ஓட்டங்களும், டெண்டுல்கர் 383 ஓட்டங்களும், லாங்கர் 369 ஓட்டங்களும், ஹட்ரிச் 353 ஓட்டங்களும், கங்குலி 284 ஓட்டங்களும், ஸ்ரீவோ 267 ஓட்டங்களும் பெற்றனர்.

## 2 ஆவது ஒரு நாள் போட்டியில்

# 6 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் நியூஸிலாந்து அணியை வென்றது

(குயீன்ஸ்ரவுண்)

பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் குயீன்ஸ்ரவுணில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக பாகிஸ்தான் அணி நாணயச் சுழற்சியில் வென்று நியூஸிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட் இழப்புக்கு 235 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜேக்கப் ஓரம் 54, மக்கலம் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களைப் பெற்றனர்.

இவர்கள் இருவரும் 104 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் என்ற நிலையில் இருந்த நியூஸிலாந்து அணியை, கௌரவமான ஒரு இலக்கை அடைய வழிசெய்தனர்.

பந்துவீச்சில் மொகமட் சமி 3 விக்கெட்டுக்களையும், சொகைப் மாலிக் 2 விக்கெட்டுக்களையும், சபீர் அகமட், அசார் மஹ்மூட், அப்துல் ரஸாக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி - நான்கு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை 47 ஓவரிலேயே அடைந்தது.

இதில் இம்ரான் பர்ஹத் 87 ஓட்டங்களையும், யூசுப் யுகானா ஆட்டமிழக்காது 88 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சாளர்களில் பட்லர், ரபி, ஓரம், விற்ரோறி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஏற்கனவே ஓக்லண்டில் நடந்த முதலாவது போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

## அவுஸ்ரேலியாவுக்கு சவால் விடும் வகையில் இந்திய அணியினர் சிறப்பாக விளையாடினர்!

### ஸ்ரீவோ புகழாரம்



(சிட்னி)

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையேயான 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிட்னி மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்துமுடிந்தது.

மிகவும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட இந்த டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது. இந்த டெஸ்ட் தொடரோடு அவுஸ்ரேலிய அணித்தலைவர் ஸ்ரீவோ ஓய்வுபெற்றார். இதைத தொடர்ந்து சிட்னி மைதானத்தில் அவருக்கு வழியனுப்பு விழா நடந்தது. அப்போது அவுஸ்ரேலிய வீரர்கள் ஸ்ரீவோவை தங்கள் தோளில் சுமந்துகொண்டு வலம்வந்தனர்.

பின்னர் ஸ்ரீவோ நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது -

இந்திய வீரர்களின் துடுப்பாட்டம் பலம்வாய்ந்ததாக இருந்தது. அதேபோல், சிறந்த பந்துவீச்சாளர்களும் அந்த அணியில் உள்ளனர். இந்திய வீரர்களின் ஆட்டம் எங்களுக்கு சவாலாக இருந்தது. மொத்தத்தில் இந்தியா ஒரு சிறந்த அணியாகத் திகழ்கிறது.

இந்தத் தொடரில் இரு அணிகளுமே சிறப்பாக போராடி விளையாடினார்கள். சிட்னி போட்டியில் எங்களால் போராடியே சமநிலை செய்யமுடிந்தது.

எனது கப்டன் பதவியில் அவுஸ்ரேலியா அதிக வெற்றிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது. இதற்கு அணியிலுள்ள அனைத்து வீரர்களதும் அபாரமான ஆட்டம்தான் காரணம்.

சரியான நேரத்தில்தான் ஓய்வு பெற்றுள்ளேன். நீண்டகாலம் என்னை விளையாட அனுமதித்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், ரசிகர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு ஸ்ரீவோ கூறினார்.

## தென்னாபிரிக்க - மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையில்

# சமநிலையில் முடிவடைந்த மூன்றாவது டெஸ்ட் போட்டி

தென்னாபிரிக்க - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் கேப்டவுனில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி - முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 532 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றுடோல்ப் 101 ஓட்டங்களையும், பௌச்சர் ஆட்டமிழக்காது 122 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்திய அணி சார்பில் சான்போட் 4, மொகமட், எட்வேட் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 427 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கைல் 116, லாரா 115 அதிகூடிய ஓட்டங்களாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் நெல் 5, பொலக் 2, நிற்னி, கலிஸ் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இனிங்சில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 335 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இதில் கிப்ஸ் 142 ஓட்டங்களையும், கலிஸ் ஆட்டமிழக்காமல் 130 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்திய அணி சார்பில் எட்வேட், ட்ரேக்ஸ் மற்றும் சர்வான் மூவரும் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 441 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்தது. அந்த அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 354 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஐந்தாம் நாள் ஆட்டம் நிறைவடைந்தது.

இதில் சர்வான் 69, லாரா 86, ஸ்மித் ஆட்டமிழக்காமல் தனது



முதலாவது சதத்தை - 105 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 15 பவுண்டரிகள் அடங்கலாக 105 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டமை ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் நிற்னி 3, பொலக், நெல் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் பெற்றனர்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் - ஏற்கனவே தென்னாபிரிக்க அணி இரு போட்டிகளில் வென்று 2:0 என்ற நிலையில் முன்னணியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ம. தி. மு. க பிரமுகர்கள் எட்டுப்பேரின் பிணைமனுத் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது

(சென்னை)

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க பிரமுகர்கள் 8 பேரின் பிணைமனு மீதான தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றம் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தது.

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாகப் பேசியதாக ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, ம.தி.மு.க மாவட்டச் செயலாளர்கள் கணேசமூர்த்தி, செவந்தியப்பன், இளவரசன், பூமிநாதன், பொறுப்பாளர்கள் அழகுசுந்தரம், மணியன், கணேசன், நாகராசன் ஆகியோரை பொடா சட்டத்தின் கீழ் தமிழக அரசு கைது செய்திருந்தது.

இவர்களில் வைகோ தவிர ஏனைய 8 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் பிணை அனுமதி கோரி, மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களை விசாரிப்பதற்கு ஒரு சிறப்பமர்வு அமைத்து ஜனவரி முதல்வாரத்தில் விசாரிக்க தலைமை நீதிபதி உத்தரவிடவேண்டும் என்று - ம.தி.மு.க வழக்கறிஞர்கள் தேவதாஸ், நன்மாறன் ஆகியோர் உயர்நீதிமன்றப் பதிவாளரிடம் மனு சமர்ப்பித்திருந்தனர்.

இதனையடுத்து, ம.தி.மு.கவின் பிணைமனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிவான்கள் தினகரன், நாகப்பன் அடங்கிய குழு திகதி குறிப்பிடாமல் தீர்ப்பைத் தள்ளிவைத்தது.

இதற்கிடையே, அனைத்து வழககுக்ளிலும் பிணை அனுமதி பெற்றுவிட்ட தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் இன்று கடலூர் சிறையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

இதேவேளை, ம.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் கண்ணப்பன் மற்றும் செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையில் உள்ள வைகோவை நேற்று மாலை சந்தித்துப் பேசினர். ஒரு மணிநேரம் நீடித்த இந்தச் சந்திப்பிற்குப் பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய கண்ணப்பன் -

தி.மு.க தலைவர் கருணாநிதியுடன் ம.தி.மு.க தலைமை நிர்வாகிகள் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து வைகோவிடம் விபரிக்கப்பட்டதாகவும் -

கடந்த 2 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த ம.தி.மு.க பொதுக்குழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதையடுத்து, இனி எப்போது பொதுக்குழுக் கூட்டத்தைக் கூட்டலாம் என்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## சிறுவன் காயம்

மரத்தால் வீழ்ந்து படுகாயமடைந்த சிறுவன் ஒருவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இணுவில் மேற்கில் வசிக்கும் - இணுவில் மத்திய கல்லூரி மாணவனான உதயகுமார் உசாந்தன் வயது 11 என்பவரே காயமடைந்தவராவார்.

வீட்டில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தபோது, ஊஞ்சல் கயிறு அறுந்ததாகவும், அதனை மீண்டும் கட்டுவதற்காக மரத்தில் ஏறியபோதே, இவர் தவறி வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (121)

# லண்டன் பொறியியல் சான்றிதழ் கற்கைநெறி இவ்வருடம் முதல் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில்

## பணிப்பாளர் யோகராஜன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

லண்டனில் பொறியியல் சான்றிதழ் கற்கைநெறியான சிற்றி அன் அன்கில்ஸ் கற்கைகள் - இந்த வருடம் முதல் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியிலும் கற்பிக்கப்படவுள்ளது என, கல்லூரியின் அதிபரும், பிராந்தியப் பணிப்பாளருமான நா. யோகராஜன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

லண்டனின் தரச்சான்றிதழைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய சிற்றி அன் கில்ஸ் பொறியியல் பாடம் - இந்த வருடம்முதல் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் கற்பிப்பதற்கு மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சு அனுமதியளித்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்திருப்பதால், இந்த மாத இறுதிக்குள் இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. இரண்டு வருடக் கற்கை நெறியான இந்தப் பாடநெறியைக் கற்பிப்பதற்கு, முதலில் கொழும்பிலிருந்தே விரிவுரையாளர்கள் அழைத்து வரப்படவுள்ளனர்.

காலப்போக்கில் எமது பிரதேசத்திலுள்ள திறமைவாய்ந்த விரிவுரையாளர்களும், இந்தப் போதனைகளைச் செய்வதற்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரியொன்றில் - சான்றிதழ் தரப் பயிற்சியை முடித்து, சான்றிதழ் பெற்றுள்ளவர்கள் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்கரை வீதியைப் புனரமைக்க நிக்கொட் நிறுவனம் நிதியுதவி

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் - மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான 19 கிலோமீற்றர் நீளமுள்ள கடற்கரைப் பிரதேச வீதியை புனரமைப்பதற்கு, நிக்கொட் நிறுவனம் 324 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளபோதும், வீதி புனரமைப்பு வேலைகள் திருப்தியளிப்பதாக இல்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இதுதவிர, 7 கிலோமீற்றர் நீளமுள்ள - களியிலான வீதியே புனரமைக்கப்பட்டுள்ளது. கல்லினால் புனரமைக்கப்படவேண்டிய வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

உலக உணவு ஸ்தாபனமும், இந்த வீதி புனரமைப்புக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கியது.

களிமண்ணினால் செய்யப்படும் புனரமைப்பு வேலைகள், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாள கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் முன்னெடுக்கப்பட்டு கொண்டுவருகிறது. (122)

# தொழில்நுட்ப நிறுவனத்தின் விரிவுரை பத்தொன்பதாம் திகதி ஆரம்பம்

(சுதுமலை)

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் - எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகின்றன. உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கற்கை நெறிகளான - உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, தேசிய ஆங்கில டிப்ளோமா, தேசிய வணிக டிப்ளோமா போன்ற பிரிவுகளுக்கான விரிவுரைகளுடன், முதலாம் வருட புகுமுக மாணவர்களுக்கான விரிவுரைகளும் ஆரம்பமாகின்றன.

இலங்கையிலுள்ள 11 உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் அதிகளவு மாணவர்களைக் கொண்டதும், திறமையான பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களையும் உள்ளடக்கிய நிறுவனம் - யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. (91)

# மிகவும் மோசமடைந்த நிலையில் சுன்னாகம் – மாசியப்பிட்டி வீதி

சுன்னாகம் சந்தியிலிருந்து மாசியப்பிட்டி சந்தியை நோக்கிச் செல்லும் வீதி, மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக, பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வீதியின் பல் வேறு இடங்களில் பாரிய கிடங்குகள் காணப்படுவதாகவும், இரு வருடங்களுக்கு மேலாக அவை சீர்செய்யப்படாமல் உள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த வீதியின் அகலமும் மிகவும் குறுகியதாக உள்ளதால், வாகனங்கள் ஒன்றையொன்று விலத்த முற்படும்போது, விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. இந்த வீதியில் - அண்மையில் வடபிராந்திய போக்குவரத்து கடைக்கு சொந்தமான பஸ்வண்டியொன்றும், ஓட்டோ ஒன்றும் விபத்துக்குள்ளாகியதில், ஓட்டோ பலதத சேதத்திற்குள்ளான சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.


அத்தோடு, வீதியின் இருபக்கங்களில் வசிக்கும் பொதுமக்கள் சிலர், தமது கட்டடத்தேவைகளுக்கு கல், மணல் போன்றவற்றையும், இந்த வீதியிலே பறிப்பதால் போக்குவரத்திற்கு மேலும் இடைஞ்சல் ஏற்படுகிறது.

கந்தரோடை குளத்திற்கு அருகிலுள்ள இந்த வீதிப்பகுதி சுமார் அரையடியுள்ள பாரிய குழியொன்றைக் கொண்டுள்ளது. அதில் பயணிகளுடன் வரும் போக்குவரத்துச் சபை வாகனங்கள், இந்தக் குழியினுள் இறங்கும்போது, அருகிலுள்ள வயற்பகுதியினுள் குடைசாய்ந்து விழக்கூடிய ஆபத்துக்களும் நிறைய உள்ளன.

பாடசாலை சேவையில் ஈடுபடும் பஸ் ஒன்று, பலமாதங்களுக்கு முன்னர் இவ்வாறு குடைசாய்ந்தபோதும், தெய்வாதனமாக எவருக்கும் உயிர் ஆபத்து ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வீதிப் புனரமைப்புத் தொடர்பாக - வலிதெற்கு பிரதேசசபையினரும், உயரதிகாரிகளும் கவனத்தில் கொள்ளாமல் இருப்பதாக மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)





நேற்று நடைபெற்ற தியாகி அறக்கொடை நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் படையினரால் கைது செய்யப்பட்டு, கணவரை இழந்த குடும்பப் பெண்ணொருவருக்கு உதவு தொகையை வழங்குவதை முதலாவது படத்திலும், யாழ். பல்லைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பாடசாலை மாணவிகளுக்குச் சீருடை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## வலைப்பந்தாட்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது. மருதனாமடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப் போட்டியில், உடுவில் பிரதேச செயலகத்திற குீட்பட்ட வலைப்பந்தாட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன.

அதேவேளை - தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுபபோட்டியொன்றும் இன்று நடை பெறவுள்ளது. ஆறுபேர் கொண்ட இந்தப் போட்டி - மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(ச)

## பரீட்சை மண்டபம் தொடர்பான அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தகவல்தொழில்நுட்பப் பூங்காவில் **Diploma in MS-Office** பயிற்சினை நிறைவு செய்துள்ள 11 பிரிவுகளுக்கான பரீட்சைகள் யாவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள திகதிகளில் யாழ்.இந்துக்கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் இடம்பெறும்.

பரீட்சைக்கு வரும் மாணவர்கள் தமது அனுமதி அட்டையினையும், அடையாள அட்டையினையும் தவறாது கொண்டுவரவும். இதுவரை பரீட்சைக்கான உறுதிப்படுத்தலை மேற்கொள்ளாத மாணவர்கள் - உடனடியாக இன்று பயிற்சி முகாமையாளரைச் சந்திக்குமாறு பயிற்சி முகாமையாளர் கேட்டுள்ளார்.

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச்சங்கமும் படையணிகளும் - நலன்புரி அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட தொழில் பயிற்சித்திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டிற்குட்பட்ட யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பில் சித்தியடைந்த 24 மாணவர்களுக்கு - சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து தையல பொருட்கள் கண்காட்சி ஒன்றும் இருநாட்கள் தொடர்ந்து நடத்தப்படும்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ர.ரஜீவன்
முகவரி : நியூதர்சா ஸ்ரூடியோ, உடுப்பிட்டி.

ஆறாவது அகவையில்



பெயர் : தே.அஞ்சலின் அலண்டினா
முகவரி : 07, கோவில்வீதி, யாழ்.நகர்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## கூட்டுறவு மகளிர் அபிவிருத்தி அங்குரார்ப்பணக் கூட்டம்

(அரியாலை)

அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் - மகளிருக்கான கூட்டுறவு மகளிர் கூட்டுறவு அபிவிருத்தித்திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவுள்ளது.

இதன்கீழ் - மகளிருக்கான தையல், கேக், ஐசிங், கைவினை, சிகை அலங்காரம், தும்பு உற்பத்தி, போன்ற பயிற்சிகளை வழங்கி, பயிற்சி முடித்து வெளியேறிய மகளிர்களுக்கு, அவர்கள் சுயதொழிலகளில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்ற மேற்படி நிகழ்வில்- பிரதம விருந்தினராக, யாழ்.கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ.கனகசபாபதி கலந்துகொண்டு, வைபவரீதியாகப் பயிற்சிநெறியை ஆரம்பித்து வைத்தார். யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபைச் செயலாளர் சி.சிவசுப்ரமணியம், மகளிர் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி.வேதவல்லி, சங்கத்தின் முகாமையாளர் ச.புஸ்பராஜா ஆகியோரும் மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

## சீர்கேடாக இயங்கும் உணவகம்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி சந்தியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் - கழிவகற்றும் இடம் மிகவும் சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுவதுடன், இவற்றினால் சுற்றுப்புறத்துக்கான சுகாதாரம் சீர்குலைவதாக முறைப்பாடுகள் கூறப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது -

சம்பந்தப்பட்ட உணவுக்கடையின் கழிவுசேரும் பகுதியில், பாதுகாப்பாகப் பேணாதுவிடுவதால் துர்நாற்றம் வீசுவதாகவும், அருகில் வாசிகசாலை, பாலர்பாடசாலைகள் என்பன இயங்குவதால் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும், இலையான்களின் தொல்லை வாசிகசாலைப் பகுதியில் அதிகம் காணப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பலமுறை இந்த விடயம் தொடர்பாக பிரதேசசபையினரிடம் கூறப்பட்டள்ளது எனவும், பிரதேசசபையினர் இந்த விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (205)

## வெளிவாரி மருந்தாளர் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு சுகாதார அமைச்சினால் நடத்தப்படுகின்ற வெளிவாரி மருந்தாளர் பயிற்சி நெறிக்கு - நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியவர்களின் புள்ளியடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கு 03.01.2004வரை வராதவர்களின் இடங்களுக்கு - நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியவர்களில், பெற்ற புள்ளி ஒழுங்கின்படி சேர்க்கப்படவுள்ளனர். இந்தப்பயிற்சிக்கான நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில், பயிற்சிநெறியைத் தொடர ஆர்வமுள்ளவர்கள் - நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப.9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வருகை தருமாறு பதில மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## இலவச கணினி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளாலும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட இளைஞர்கள், யுவதிகளுக்கான இலவச கணினி பயிற்சி வகுப்பு தொழில் பயிற்சித் திட்டத்தின்கீழ் நடத்தப்படவுள்ளது.

பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விரும்புவோர் - 20.01.2004 திகதிக்கு முன்னர் சுயவிபரத்தை 'மக்கள் நலன்புரிச்சங்கமும் படையணிகளும், ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு' என்னும முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.




# சிற்பக்கலையில் புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்த முயற்சிக்கின்றேன்

இலைமறை காய்கள் என்று ஒரு சொற்றொடர் தமிழில் உண்டு. இந்த இடத்தில் அந்த சொற்பதத்திற்கு என்ன அவசியம் நேர்ந்துவிட்டு என்ற கேள்வி எழுவது இயலபு. அறிஞராகவும், கலைஞராகவும் இருக்கின்ற சிலரின் வாழ்க்கை இவ்வாறுதான் இருந்துவிடுவது தவிர்க்கமுடியாமல் போய் விட்ட நிகழ்வோ, என்னவோ தெரியவில்லை. அந்த நிலைமை தமிழர்களின், அதுவும் யாழ்ப்பாணத்தமிழர் களின் ஒரு சாபக்டோ என்றுகூட எண்ணத்தோன்றுகின்றது.

யாழ்ப்பாணத்தில் அதுவும் சிவன்கோயில் வடக்கு வீதியில் ஒரு சிற்பக்கலைஞர் இருக்கிறார் என்று சொன் னால், அவர் இறைவனுடைய சிலைகளைக் கருங்கல்லில் வடிக்கிறார் என்று கூறினால், யாருக்கு அந்த கலைஞனைப் பற்றித் தெரியும் என்று கேட்டால், விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகவே இருப்பார்கள். அந்தவகையில் வாழு கின்ற ஒரு கலைஞராகவும், அந்தக் கலையினை ஒரு தொழிலாகவும் கொண்டுள்ள சீனிவாசஸ்தபதியில் மகன் தட்சணாமூர்த்தியுடன் மாலை வேளையில் சந்திப்புக்காகச் சென்றோம்.

அவருடைய வீட்டை அடையாளம் காணக்கூடிய ஏதாவது ஒரு போர்ட் இருக்குமோ என்று, சைக்களில் சென்ற வண்ணம் தலையை உயர்த்தியபடி சென்ற எமக்கு-ஏமாற்றமே காத்திருந்தது. அந்தச் சிவன் கோயிலின் வடக்கு வீதியால் சென்றால், சிற்பத்தொழில் ஒன்று நடைபெறுகின்றதற்கான அடையாளம் எதுவும் காணப்பட வில்லை. ஒருவாறு விசாரித்து அறிந்து, அவருடன் உரை யாடினோம். குறுகலான ஒரு இடத்தின் வழியே வீடுகளைத் தாண்டி சிறிய ஒரு இடத்தில் பெரிய வேலைகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன.

அவருடன் உரையாடியபோது -

1923 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து வந்து சிவன் கோயில் வடக்கு வீதியில் எனது தகப்பனார் வாழ்ந்து வந்தார். சிற்பம், சோதிடம், மாந்திரீகம், வைத்தியம் போன்ற பலவிதமான தொழில்களைச் செய்துகொண்டிருந்தார். அவருடைய வழித்தோன்றலாக நாங்கள் இந்தச் சிற்ப வேலைப்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றோம். 1923 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தியாவில் இருந்துதான் எனது தகப்பனார் இந்த வேலைகளைச் செய்துவந்தார்.

எனக்கு ஒரு மகள்தான். என்னுடைய அண்ணனின் மகன்கள்தான் தற்போது இந்த வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நானும் இந்த வேலைகளில் ஈடுபட்டு வருகின்றேன். வேறும் சிலரும் சம்பளத்துக்கு வேலை செய்கின்றார்கள் என்று கூறி, தனது தொழில் அனுபவங் களைத் தட்சணாமூர்த்தி விபரித்தார்.

கருங்கல்லுச் சிற்பங்கள், வார்ப்புச் சிற்பங்கள், கோயில் களுக்குத் தேவையான அனைத்து விதமான தகட்டு வேலைகளோ, வார்ப்பு வேலைகளோ செய்து கொண்டிருக் கின்றோம்.

ஆலயங்களில் வைக்கப்படுகின்ற மூலஸ்தானத்து சிலைகள், பரிவாரத்தெய்வங்கள் போன்றவற்றை கருங்கல் சிற்பங்கள் என்றவகையில் செய்கின்றோம். ஆட்களின் உருவங்களை நாங்கள் செய்வதில்லை. அதில் அவ்வளவு பரிச்சயமும் இல்லை. நாங்கள் 31/2 அடி உயரம் அளவில் சிற்பங்களைச் செய்கின்றோம்.

பல இடங்களில் இருந்தும் என்னுடைய சிற்பங்களை வந்து வாங்கிச் செல்கின்றார்கள். வன்னியில் இருந்து வந்து கூட எனது சிற்பங்களை வாங்கியுள்ளனர். அராலி, நாவலர் றோட், வவுனியா ஆகிய பகுதிகளிலும் இந்த தொழிலைச் செய்கின்றார்கள். அநேகமாக இந்தத் தொழிலைச் செய்பவர் கள் எமது உறவினர்களாகத்தான் இருக்கும்.

இந்தச் சிற்பத்தொழில் எமது பரம்பரைத் தொழில் ஆகும். இதனை நாங்கள் பழகினோம் என்று கூறமுடியாது. எங்களு டைய மூதாதையர்களே இந்தத் தொழிலை எமக்குப் பழக்கிய வர்கள் என்றுகூடச் சொல்லிக்கொள்ளலாம்.

சிற்பங்களைச் செய்தல், வார்ப்பு வேலைகளைச் செய்தல் என்பதற்கு ஒரு அளவுப் பரிமாணங்கள் உண்டு. அவற்றை எமது மூதாதையர்களே எமக்குச் சொல்லித்தந்தார்கள். அதன்படி நாங்கள் செய்கின்றோம்.


எனக்குப் பின்னால் செய்யக்கூடியஎ விற்கு எனக்கு மகன் இல்லை. என்னுடைய ஒரே மகள் - அவர் இந்த வேலைகளைச் செய்வதற்கு இல்லை. ஆயினும், அவளிடம் இயல்பாகவே ஓவியம் வரைதல் என்னும் கலை சேர்ந்துள்ளது. இதைவிட, என்னுடைய அண்ணனின் மகன்கள் தற்போது இந்த தொழிலைச் செய்து வருகின்றனர். அவர்கள் தமது மகன்களுக்கு இந்தத் தொழிலை சொல்லிக்கொடுப்பார்கன் என்று எண்ணுகின்றேன்.

இந்தியாவில் இருந்து முதன்முதலாக என்னுடைய தாத்தா மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலின் சிற்பவேலைகளுக்காக வந்திருந்தார். தாத்தாவின் மகன்கள் நாலுபேர், அவரில் எனது தகப்பன் பின் நான், எனது அண்ணின் மகன்கள் இந்தத் தொழிலைச் செய்து வருகின்றோம். ஆனால், தற்போது இநதியாவுடனான தொடர்பு எதுவும் இல்லை. இந்தியாவுக்கும் நாங்கள் போகவில்லை.

தனது சிற்பத்தொழில் பற்றிக்கூறுகையில் - இங்கு கிடங்கு போல காணப்படுவதை உலை என்று குறிப்பிடுவோம். அதில் தான் எமது மெற்றல் உருக்குவோம். பேணிமாதிரி இருக்கும் குகையில் ஒரு மென்நிறமும், களியும் சேர்ந்த ஒரு சேர்வையை



குலை என்பது. இது வெளிநாட்டில் இருந்து வருவது. அதை நாங்கள் வாங்கி உள்ளுக்குள் வைத்து சிரட்டைக்கரியை இட்டுக் கொழுத்துவோம். கொழுத்தி உள்ளுக்குள் அந்த மெறறலை வைக்க, அது உருகிக்கொண்டுவரும். அதன்பின்னர் மோல்ட் (மெழுகு) வைத்திருக்கின்றோம். அந்த மோல்டையும் சூடாக்கி அதற்குள் உள்ள மோல்டை எடுத்துவிட்டு, அந்த இடைவெளியில் உருக்கி ஊத்துவோம். அது நிரம்பியதும், அடுத்தநாள் அல்லது அதற்கு அடுத்த நாளில் நாங்கள் அதை எடுத்துப்பார்ப்போம். அதற்குள் உருவம் அமைந்து


தட்சணாமூர்த்தி

விடும். பின்பு நாங்கள் அதை ஒழுங்காக்குவோம்.

இந்த வேலையை ஒரு தொழிலாக நாங்கள் செய்கின் றோம் என்றில்லை. அவ்வாறு செய்வது என்று சொன்னால்-ஒரு முதலீட்டைப்போட்டு ஒரு கடைவைத்து செய்யவேண் டும். இதனை ஒரு தொழிலாகவும் செய்கின்றார்கள்.

எங்களுக்கு ஓடர் வருகின்றபோதுதான் நாங்கள் இந்தச் சிற்பங்களை அமைத்துக் கொடுக்கின்றோம்.

ஓடர்கள் எமக்கு வருகின்றனதான். எமக்கு உரியவை வந்து கொண்டுதான் இருக்கும். இந்தியாவிலிருந்தும் இந்த சிலைகள் வருகின்றன. நாங்கள் 5 ஆயிரம் ரூபாவுக்குக் கொடுக்கும் ஒரு சிலையை - அவர்கள் 15 ஆயிரம் ரூபா வுக்குக் கொடுக்கின்றார்கள். வெளிநாட்டில் இருந்து வரு கினறன என்ற பெயரில் இங்குள்ளவர்களும் அவற்றை வாஙகு கின்றார்கள்.

இந்தியாவிலிருந்து வருகின்ற சிலைகள் கனதியற் றவை. ஆனால், நாம் செய்பவை கனதியானவை. இந்தத் தொழிலைச் செய்பவர்களில் தற்போது வெளிநாடுகளுக்குச் செல்வது அதிகமாகிக் கொண்டிருக்கின்றன அல்லவா? ஆகவே எமது தொழில் அருகிக்கொண்டுதான் செல்கின்றது என்று கூறவேண்டும்.

எந்தவொரு பாமரனும் தனது நேர்த்தியைச் செய்துகொள் ளும் வகையில், எமது தொழிலை நாங்கள் செய்கின்றோம்.

நாங்கள் ஒரு சிலையைக் கருங்கல்லில் செய்யும்போது-நாம் செய்யும் சிலைகளில் ஏதேனும் தவறு ஏற்பட்டால், அந்தக் கருங்கல்லை அப்படியே விட்டுவிடுவோம். உடைந் தால் ஒட்டவோ, அந்தச் சிலையை விடுத்து வேறொரு சிலையையோ குறித்த கல்லில் செய்யமாட்டோம்.

நாங்கள் ஒரு கருங்கல் சிலையைச் செய்யும்போது, சாமியைக் காலுக்குள் போட்டுக்கூட செய்துகொண்டிருப்போம். அதனையாரும் பார்த்தால் - இவன் என்னடா காலுக்குள்ளே இவற்றைப் போட்டுக்கொள்கின்றான் என்று நினைப்பர். ஆனால், நாங்கள் அப்படி நினைப்பதில்லை. நாங்கள் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறோம். அவ்வளவுதான். பின்னர் அந்தச்சிலைகள் ஆலயங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குதான் தெய்வத்தன்மையைப் பெறுகின்றன. சிலை செய்துமுடிந்த கையோடு, கண் திறத்தல் என்ற நிகழ்ச்சி அவரவர் வசதிக்கேற்ப நடைபெறும்.

இது ஒரு தெய்வீகமான தொழில். இது வியாபாரரீதி யாகச் செய்யப்பட்டு வருகின்றது. இந்தக் காரணத்தால் கலையம்சத்துடன் செய்யவேண்டியபோது, அங்கு அதற் குரிய ஊதியம் கிடைக்காமற்போகிறது. கலையம்சத்துடன் வேண்டுமானால், அதற்கு ஒருவிலை மற்றையவற்றிற்கு ஒருவிலை. இவ்வாறுதான் நாங்கள் தொழிலைச் செய்கின் றோம். ஆயினும், நாங்கள் ஒரு குறைவான விலையில் தான் இந்த வேலைகளைச் செய்துகொடுக்கின்றோம்:

சாதாரணமாக ஒரு பொக்கற்றுக்குள்கூட ஒரு பொருளை எடுத்துச் செல்லமுடியாதநிலையிலும்கூட, இந்தப் பாதைக் கூடாக சிலைகள் களவு போகின்றன. இதை யார் செய்கிறார் கள் என்று தெரியவில்லை. பெரியதொரு ஆச்சரியமாகவுள் ளது. இரண்டு சோதனைச்சாவடியிலும் கண்டுபிடிக்க முடியாதளவில், சிலைகள் காணாமற்போவது, திருட்டு இடம்பெறுவது கவலையையும் தருகின்றது. இப்படிக் களவு போன கடவுளை - களவெடுத்த கடவுள் சிலையை இன் னொருத்தன் வைத்து வணங்குகிறான் என்றால், அது இன்னமும் வியப்பாகவே உள்ளது.

தெய்வீகமான இந்தத் தொழிலை யாழ்ப்பாணத்தில் எவரும் மதிக்கிறார்கள் இல்லை என்று நினைக்கும்போது, மிகவும் கவலையாகவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒருவர் என்னைப் பேட்டி காண்பதாகக் கூறியிருந்தார். எமது தொழிலைப் போன்று அருகி வரு கின்ற சில தொழில்களை எவரும் கவனிக்காமல் இருக்கின் றார்கள் என்று மனவேதனைப்பட்டார்.

இப்படியான எமது தொழில்களை ஊக்குவிக்க நட வடிக்கை எடுக்கவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளைச் செய்ய முன்வருதல் வேண்டும்.

சுவாமிமலை, தஞ்சாவூர் போன்ற இடங்களில் சிற்ப பயிற்சிக்கூடங்கள் உள்ளன. எமது மூதாதையர்கள் ஏட்டுச் சுவடிகள் போன்றவற்றை வைத்திருந்தார்கள். அவை இடப் பெயர்வுகளுடன் இல்லாமற்போய்விட்டது.

எமது வேலையை இலகுவாக்கக்கூடியவகையில், புதிய தொழில்நுட்பங்களை எவ்வாறு இந்த சிற்பக்கலையில் புகுத துவது என்பது பற்றி யோசித்து வருகின்றேன். அது தொடர் பான செயற்பாடுகளை எதிர்காலத்தில் செய்வேன் என்று கூறி, தட்சணாமூர்த்தி தனது செவ்வியை நிறைவுசெய்தார்.

**நேர்காணல்:- பூ.நகுலன்**

## வாரம் ஒரு சிறுதொழில்

### கற்றாழை நாரிலிருந்து தூரிகை செய்யும் முறை

தாழை வகையைச் சேர்ந்தது கற்றாழை எனும் பெரும் செடி. தாழைபோன்ற, ஆனால் அதைவிடப் பெரிய அளவில் கனத்து தடித்த மடல்களைக் கொண்டிருக்கும். இவை சுமார் 5 மீற்றர் முதல் 6 மீற்றர் உயரம்வரை யும், 21/2 முதல் 3 மீற்றர் அகலம் வரையும் வளரும். இதன் மடல் 60 செ.மீற்றர் முதல் 70 செ.மீற்றர் வரை நீண்டிருக்கும். 2 - 3 செ.மீற்றர் கனம் உள்ளதாக இருக்கும். மடலின் ஓரம் கூர்மையாகவும், உள்ளே சதைப்பற்றும், நாரும் நிறைந்திருக்கும். இந்த நார் வெண்ணிறமாக, உறுதியாக இருக்கும். கற்றாழை நாரினால் பிறஸ் தயாரிப்பதற்கு கற்றாழைச் செடியின் மடல்களைத் தேவையான அளவு வெட்டிக்கொண்டுவரவேண்டும். மடலை வைத்தால், மேற்பக்கம் 4"யும், கீழ்ப்பக்கம் 4"யும், வலது, இடது பக்கம் 4" இடைவெளிவிட்டு 2 - 3 செ.மீற்றர் கனமுள்ள ஒரு மரப்பலகையைத் தயார் செய்துகொள்ளவேண்டும். இந்தப் பலகையைத் தரையில் மட்டமாக வைத்துக்கொண்டு, ஒரு மூலையில் வலது காலை வைத்து உட்கார்ந்துகொண்டு, கற்றாழை மடல் ஒன்றை எடுத்து அழுத்திப் பிடித்துக்கொண்டு, தேங்காய்ச் சிரட்டையின் கூர் பாகத்தினால் அழுத்தி முன் பக்கமாக வழித்தால், முதலில் மடலின் மேலுள்ள தோல் கழன்றுவிடும். மேலும் மேலும் சிரட்டையினால் அழுத்தி நன்றாக வழித்தால், மடலில் உள்ள சதைப்பாகம் நாரைவிட்டுக் கழன்றுவிடும். இந்த விதமாகப் பலமுறை வழித்தால், மடலிலுள்ள தோல், சதை இவைகளெல்லாம் தனியே வழிக்கப்பட்டு வெண்ணிறமாக நார்மட்டும் தனித்து நிற்கும். இந்த நாரை மட்டும் தனியே எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். பின்னர், எல்லாவற்றையும் வெயிலில் காயப்போடவேண்டும்.

நாரை வெட்டி சிக்குப் போடாதபடி பக்குவமாகக் கோதியெடுத்து, ஒரு பக்கத்தில் அடுக்கி வைத்துக்கொள்ள வேண்டும். அதன்பின், இந்த நார் வெண்ணிறக் கூந்தல்போல் இருக்கும். உறுதியாகவும் இருக்கும். இருந்தாலும், இவை மேலும் உறுதிப்படுத்தவேண்டுமானால், 2 லீற்றர் தண்ணீரை ஒருபாத்திரத்தில் விட்டு, 200 கிராம் வைச்சிரத்தை அதில்போட்டு, அடுப்பில் வைத்துக் காச்சி அதில் எவ்வளவு நார் ஊறவைக்கமுடியுமோ அவ்வளவு நாரை அதில் அமிழ்த்தி ஒருநாள் முழுவதும் வைத்திருந்து மறுநாள் நாரை எடுத்து, சவர்க்காரமிட்டு நாரைக் கழுவி நன்றாக உலர்த்தி எடுத்துக்கொள்ளவேண்டும். சைக்கிள் சக்கர பிறஸ், தூசு தட்டும் பிறஸ் போன்றவற்றைத் தயாரிக்கலாம். இவைகளை நல்ல நிறங்களில் தயாரித்தால் பார்வையாக இருக்கும். ஆகையால் இந்த நார்களுக்கு முக்கியம் சாயம் ஊட்டவேண்டும். இதற்கு கோழிச்சாயம் போன்ற சாயங்களை வெந்நீரில் கரைத்து அதில் இந்த நாரைப் போட்டு, ஒருநாள் முழுவதும் ஊறப்போட்டு எடுத்தால், நாரில் சாயம் ஏறிவிடும்.

பின்னர், வெயிலில் காயவைத்து உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

எந்தவகையான சாயப் பொடி ஆனாலும், அவை வெந்நீரில் கலந்து உபயோகப்படுத்துவதே சிறந்தமுறை யாகும். தேவைக்கேற்றபடி சாயத்தைப் பயன்படுத்தவேண்டும்.

(தூரிகை செய்யும் முறை பற்றி அடுத்தவாரம் பார்ப்போம்)

# பால் மாடுகளில் ஏற்படும் முக்கிய நோய்கள்

கறவை மாடுகளிலும், கறவை ஆடுகளிலும் ஏற்படும் ஒரு முக்கிய நோயாக - மடியழற்சி நோய் காணப்படுகின்றது. இந்த நோய் ஏற்பட்டால், பாலுற்பத்தி தடைப்பட்டு பொருளாதார நட்டம் ஏற்படும்.

இந்த மடியழற்சி - கறவை மாடுகளிலும், பால் ஆடுகளிலும் பலவகையான பக்றீரியா, பங்கஸ் நோய்க்கிருமிகளின் தாக்கத்தால் ஏற்படுகின்றது.

இந்த நோய்க்கிருமிகள் - மாடுகள் பால் சுரக்கும் காலத்தில் மாடுகளின் முலைக்காம்புத் துவாரமூடாக மடிக்குள் சென்று மடியழற்சியை உண்டு பண்ணுகிறது.



இந்த மடியழற்சி இரு வகைப்படும் -

"சப்கிளினிகல்" இது நோய் உடன் வெளித்தோன்றாது.

கிளினிகல் - இது நோயை உடன் வெளிக்காட்டும்.

நோய் ஆரம்பிக்கும் போது முதலில் மடியிலுள்ள பாற்தொட்டி இழையங்களைத் தாக்கும், பின்னர் பால் வாய்க்கால் இளையத்தினைத் தாக்கி - பால் சுரக்கும் கலங்களை அழிக்கும்.

**நோயின் அறிகுறி:-**

பால் கறக்கும் பொழுது பாலில் வேறுபாட்டைக் காணலாம்.

1. பால் தண்ணீர்தன்மையுடைய தாய் இருக்கும்.
2. பாலில் தயிர் போன்று கட்டிகள் வரும்.
3. பால் கறக்கும்போது, பாற்கட்டிகள் முலைத்துவாரத்தை அடைத்தல்.
4. பாலில் இரத்தத் தன்மை கலந்து வருதல்.
5. பால் நல்லதுபோல் இருந்தாலும் காய்ச்சும்போது திரைதல்.
6. பாதிக்கப்பட்ட மடித் தொகுதி முலைக் காம்பு வீங்கி இருத்தல்.
7. மடி சூடாக இருத்தல்.
8. மடியில் தொடும் பொழுது நோ ஏற்படல்.
10. மாடுகள் உணவு அருந்தலைக் குறைத்தல் அல்லது உணவு அருந்தாமலே விடுதல்.
11. பால் உற்பத்தி குறைதல்.
12. உடம்பு சூடாக இருத்தல்.

போன்ற நோய் அறிகுறிகளைக் காட்டும்

**சப்கிளினிகல் - மடியழற்சி**

இந்த நோய் ஏற்பட்டால் பாலில் மட்டும் சிறு வேறுபாடுகள் இருக்கும். அதனைப்பரிசோதனைகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஆடுகளில் மடியழற்சி ஏற்படும் பொழுதும் மேற்கூறிய அறிகுறிகளே தென்படும். ஆனால், சில கறவை ஆடுகளில் - அழுகல் மடியழற்சி என்ற நோய் ஏற்பட்டால் மடி பெரிய அளவில் வீங்கியிருக்கும். மடி சிவப்பாக அல்லது, நீல நிறமாக இருக்கும், முலைக்காம்பை இழுத்தால் பாலின்றி இரத்தம் வெளியேறும் - முலைக்காம்பு கீழ்மடி அழுகல்த் தன்மையாய் இருக்கும். இந்த மடி வருத்தம் ஏற்பட்டால் மாற்றமுடியாது. சத்திரசிகிச்சைமூலம் மடியை அகற்றவேண்டும். இல்லாவிடின் அழுகிய மடிவிழுந்து மாறுவதற்கு அதிக காலம் எடுக்கும் அதிக மருந்துச் செலவையும் செய்யவேண்டியிருககும். சில ஆடுகள் இரண்டு மூன்று நாட்களில் இறந்துவிடும். இறக்காது ஆடு காப்பற்றப்பட்டாலும். இன விருத்திக்கு ஆட்டைப் பயன்படுத்த முடியாது.

**சிகிச்சை முறை**

கறவை மாடுகளில் அல்லது ஆடுகளில் இந்த நோய் ஏற்பட்டால், பாலில் வேறுபாடும், மடியில் வீக்கமும் தோன்றும் இந்த அறிகுறிகள் காணப்பட்டால். - உங்கள் பகுதியிலுள்ள கால் நடை வைத்தியரின் உதவியை நாடவேண்டும். வைத்தியரிடம் செல்லும்போது - பாதிக்கப்பட்ட முலைகளில் இருந்து வேறு வேறாக, பாலினை எடுத்து சுத்தமான போத்தலில் விட்டுக்கொண்டு செல்லவேண்டும். அப்போதுதான் வைத்தியர், நோயைச் சரியாக இனங்கண்டு, தகுந்த சிகிச்சை வழங்க ஏதுவாக இருக்கும்.

**நோயின் தாக்கம்**

பால் உற்பத்தி குறையும், சில சமயங்களில் நோய்க்கு வைத்தியம் செய்தாலும், பாதிக்கப்பட்ட மடியில் பாலுற்பத்தியே இல்லாமல் போய் விடும். இதனால், மாட்டின் பெறுமதி குறைந்துவிடும் - வைத்தியத்திற்கும் அதிகசெலவு ஏற்படும். எனவே இந்த நோயை வராது தடுப்பது அவசியம்.

**நோய்வராது**

**தடுக்கும் முறைகள்**

1. தொழுவத்தை எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
2. தொழுவத்தில் கழிவுகள் செல்வதற்கு சரியான முறையில் கான்களை அமைத்திருக்க வேண்டும்.
3. பால் கறக்கும் முன்பு - மடி, முலைகாம்பு என்பவற்றைச் சவர்க்கார நீரால் கழுவுதல் வேண்டும்.
4. பால் எடுக்கும் பாத்திரங்கள் சுத்தமானதாக இருக்கவேண்டும்.
5. பால் எடுப்பவர் கைகளை நன்கு சுத்தமாக சவற்காரம் இட்டுக் கழுவுதல் வேண்டும்.
6. மடிவருத்தம் வந்து மாறிய மாடுகளில் இறுதியாகவே பால் எடுத்தல்வேண்டும்.
7. பால் எடுத்து முடிந்தவுடன் முலைக்காம்புகளைக் கொண்டிஸ் நீரில் நனைத்து விடவும்.

**நோயை இனங்காணல்**

கறுத்தத் துணியினால் மூடிக்கட்டப்பட்ட கப் ஒன்றில் ஒவ்வொரு முலைக்காம்பையும் இரண்டு மூன்று தடவை கறந்து விட்டுப் பார்க்க வேண்டும்.

பாலில் வத்தியாசம், கட்டித் தன்மை, இரத்தக்கட்டிகள் போன்ற வையிருந்தால், உடன் கால் நடை வைததியரை நாடவேண்டும். நோயை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தினால் இழப்பு ஏற்படாது.

மேற்படி வழிமுறையைப் பயன்படுத்தினால் மடியழற்சி நோயிலிருந்து கால் நடைகளைக் காப்பாற்றி, அதிக நன்மை பெறமுடியும்.

**டி.ஆர்.எம்.தங்கராஜா**
**அத்தியட்சகர்**
**கால்நடை வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**



கரும்பு ஓர் அயனமண்டலப் பயிராகும். கரும்பில் - குறுகியகால ரகங்கள் 10 - 12 மாதங்கள்வரை வளரும். நீண்டகால ரகங்கள் 18 மாதங்களிலிருந்து, 2 ஆண்டுகள் வரைகூட வளரும். எந்த ரகமானாலும், வளர்ச்சிக்காலத்தில் கிட்டத்தட்ட 8 மாதங்களுக்கு சூரிய வெளிச்சமும், வெப்பமும் கலநத வெயில்நிலை இருக்கவேண்டும்.

கரும்பானது - தோட்ட மணணில் மிகவும் சிறப்பாக வளரும். கல், கரடு இல்லாது 3 - 4 அடி ஆழத்திற்கேனும் பொலு பொலு என்று மண் இருப்பது மிக உகந்தது. செடியின் வேர்கள் தாராளமாய்ப் பரவும் அளவிற்கு, வேண்டிய காற்றுக்கிடைக்கவும் இந்த மாதிரியான மண்ணில் வசதி ஏற்படுகின்றது.

# இனிப்பின் உறைவிடம் கரும்பு

**கரும்பு நடுவதற்குப் பருவம் ஏது?**

இது பல பருவங்களைப் பொறுத்தது. கரும்பை மழையின் உதவி கொண்டே பயிரிடலாம். பருவமழை போதியளவு பரவலாகப் பெய்யும் இடங்களில் இது சாத்தியமாகும். எனினும், மழை காலத்தில் கரும்பு நடுவது நல்ல தல்ல. போதுமான சூரியஒளியின்றி முளைப்பு திருப்தியாய் இருக்காது. நட்ட கரும்புத்துண்டுகளும் அழுகிக் கெடும் நிலை உருவாகும். மழை காலத்தில் நடுவதால், ஒரு பிரதிகூலமும் உண்டு. ஏனெனில், கரும்பு ஒருவருடகாலப் பயிர். இந்த மழைகாலத் தில் நட்டால் அடுத்த மழைகாலத்தில்தான் அறுவடை செய்யலாம். மழை பெய்யும்போது, அறுவடை செய்வது அவ்வளவு நல்லதல்ல. இவற்றை வைத்துப்பார்க்கும்போது, நடுவதற்கு ஏற்றபருவம் - மழை காலத்துக்குச் சற்று முன்பாகவோ அல்லது பின்பாகவோ இருப்பது நன்று. கரும்பைப் பொதுவாக 2 பருவங்களில் நடுகை செய்யலாம்.

நடுபருவம் - மாசி தொடக்கம் சித்திரைவரையும். மற்றையது, ஆடி தொடக்கம் புரட்டாதி வரையும் நிகழும். இவ்வாறு செய்வதால், 4 - 6 மாதத்திற்கு தொடர்ச்சியாக கரும்பை செய்கை செய்யலாம்.

கரும்பைத் துண்டுகளாக வெட்டிப் பூமியில் நட்டால், அவை முளைத்துச் செடிகளாக வளர்கின்றன. இந்தத் துண்டுகளுக்குக் கரணைகள் என்று பெயர். முதிர்ந்த கரும்பின் அடிப்பாகத்திலிருந்து எடுத்த கரணைகள் நடுகைக்கு உகந்தவையல்ல. கரும்பு அறுவடையின்போது, நுனிப்பாகத்திலுள்ள 4 அல்லது 5 கணுக்களை வெட்டி விட்டு நடுகைக்குப் பாவிக்கலாம்.

கரும்பு நட்டதிலிருந்து சுமார் 15 நாட்களில் முளைகள் கிளம்பும். அதிலிருந்து 2 - 3 மாதங்களுக்கு அதன் வளர்ச்சி சாதுவாகவே இருக்கும். 3 ஆவது மாதம் முதல் அடிக்கணுக்களிலிருந்து, தூறுகள் (கிளைகள்) தோன்றும். தூறு எண்ணிக்கை அதிகமாகும்போது, கரும்பின் பலனும் அதிகரிக்கும். சாதாரணமாக 4 - 6 வரை தூறுகள் வரலாம்.

3 ஆம் மாதத்திலிருந்து, 8 ஆவது மாதம்வரையில் கரும்பின் வளர்ச்சி அதிகரிக்கும். அப்பொழுது அதற்கு நல்ல சூரிய வெளிச்சமும், வெப்பமும் கலந்த சூழ்நிலை தேவை. 8 ஆவது மாத்திலிருந்து இன்னும் தீவிர வளர்ச்சிகொண்டு, கணுக்களின் இடைவெளிகள் முற்றி சுகரோஸ் நிரம்பி இருக்கும். கரும்பு முற்ற முற்ற சில ரகங்களில் இந்த இடைவெளிகளில் வெடிப்புகள் உண்டாகும்.

**நிலப் பண்பு**

கரும்பு நடுவதற்கு முன், நிலத்தை வெகு சிரத்தையுடன் பண்படுத்துவது அவசியம். 5 - 6 முறை 'டிஸ்க்' பயன்படுத்தி உழவு செய்யவேண்டும். அதன்பின், பெரிய மண்கட்டிகளை உடைத்துத் தூளாக்கவேண்டும். பின்பு நிலத்தை மட்டப் படுத்தவேண்டும். இதன்மூலம், மண் சரியான பதம் அடைகிறது. மண் சரியான பதம் அடையாவிட்டால் கரும்புக் கரணைகள் திருப்திகரமாக முளை எடுக்க இவ்வாறு பண்படுத்திய நிலத்தில், 3 அல்லது 4 அடிகளுக்கு ஒரு தரம் கலப்பை கொண்டு சால் பிடிப்பார்கள். இந்தச் சால் சாதாரணமாக வயலில் நீள விட்டத்துடன் ஒரு போக்காக 30, 40 அடிக்கொன்றாக, ஏற்ற இடங்களில் தண்ணீர்பாயும் வாய்க் கால்கள் வெட்டித் தயார் செய்வார்கள். இந்த நீட்டுப் போக்கு வாய்க்கால்களை ஒன்றுடன் ஒன்று இணைக்க, குறுக்குக் கால்வாய்களும் வெட்டப்படும். சால்கள், நீண்டவாய்க்கால்கள், குறுக்கு வாய்க்கால்கள், சால்களுக்கு நடுவேயுள்ள மேட்டு நிலங்கள் எல்லாவற்றையும் அமைத்த பின்பு, வயலைப் பார்த்தால், ஒரு பெரிய சதுரங்கக் கட்டடம்போல், தோற்ற மளிக்கும்.

கரும்பு நடுவதற்கு முன் கரணைகள் தயாராக இருக்கவேண்டும். நோயற்ற கரும்புகளாகத் தேர்ந்து எடுத்து, மேற் பாகத்திலிருந்து 5, 6 துண்டுகளாக வெட்ட வேண்டும். ஒவ்வொரு துண்டுக் கரணையிலும் 3 கணுக்களும் 2 மொட்டுகளும் இருக்கவேண்டும். வெட்டிய கரும்புத் துண்டங்களை, ஏதாவது ஒரு பங்கசுக் கொல்லியும், நீரும் கலந்த தொட்டிகளில், 1, 2 மணிநேரம் ஊறவைக்கவேண்டும். அதன் பின்னர்- கரணைகளைச் செவ்வனே முளைக்கச் செய்வதற்காக வெந்நீரில் ஊறவைப்பதுமுண்டு. கரும்ப்பை 2 விதமாக நடுகை செய்யலாம்.

**1. சால் நடவு.**
**2. குழி நடவு.**

**சால்நடவு**

கரும்பு நடுவதற்கு **Dialdrin** எனும் ஒரு மருந்துப் பொடியைச் சால்களில் தூவி மணணோடு கலப்பது நல்லது. கரும்பு என்றால், கறையானுக்கு மிகுந்த பிரியம். இந்தத் தடுப்பு முறையைக் கையாளாவிட்டால், நட்ட கரணைகளை எல்லாம் கறையான் அரித்துவிடும். இந்தச் சிகிச்சையின் பின், வாய்க்கால்கள் மூலம், சால் நிரம்ப நீர் பாய்ச்சவேண்டும்.

கரணைகளில் ஒவ்வொ கணுவின் அருகிலும் ஒரு மொட்டு இருக்கும். இவைதான் முளைத்துச் செடிகளாகின்றன. மொட்டுகள் கரும்பின் ஒரே பக்கத்தில் இருக்காது. எதிர்எதிராக ஒவ்வொரு கணுவின் மேலேயும் காணப்படும். படுகக வைத்து நடும்போது, பக்கவாட்டில் மொட்டுக்கள் இருக்கும்படி நடவேண்டும். அப்போதுதான், 2 மொட்டுக்களும் முளைத்து துளிர்விட முடியும்.

(தொடரும்...)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 70/= | 90/= | 90/= | 60/= | 55/= | 70/= | 40/= |
| வெண்டிக்காய் | 20/= | 50/= | 40/= | 40/= | 35/= | 25/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 75/= | 70/= | 80/= | 65/= | 70/= | 70/= |
| கத்தரிக்காய் | 30/= | 35/= | 40/= | 20/= | 40/= | 30/= | 20/= |
| பாகற்காய் | 70/= | 70/= | 70/= | 60/= | 60/= | 60/= | 40/= |
| கரட் | 40/= | 40/= | 80/= | 40/= | 40/= | 49/= | 40/= |
| பீற்றூட் | 40/= | 45/= | 70/= | 30/= | 35/= | 40/= | X |
| வெங்காயம் | 40/= | 40/= | 50/= | 40/= | 50= | 35/= | 40/= |
| பச்சை மிளகாய் | 60/= | 50/= | 80/= | 40/= | 50/= | 60/= | 40/= |

# வானத்தில் புற்கள் முளைத்தால் — தமிழருக்கும் இறக்கைகள் முளைக்கும்

புதிய ஆண்டொன்றுக்குள் எமது வாழ்வு செல்லும்போது, எங்களுடைய மண்ணில் இந்த ஆண்டு... நாம் போரும் இல்லை, சமாதானமும் இல்லை என்ற நிலையிலும் அங்கலாய்த்து அபலைகளாகத் தவிக்கும் மனோநிலையுடனும் நுழைகின்றோம்.

போரைநிறுத்தி புரிந்துணர்வு ஒப்பந்தம்செய்து பேசிய பேச்சுக்கள் எங்கே? யாருக்கும் யாருக்கும் இடையில் பேச்சு இடம்பெற வேண்டும்? இன்று யாருக்கும் யாருககும் இடையில் பேச்சு நடைபெறுகின்றது? தென்னிலங்கை அரசியல் தலைமைகளைத் தமக்குள் தக்க வைத்துள்ள ரணிலும், சந்திரிகாவும் பேசுவதன் மூலம் கிடைக்கப்போகும் வெற்றி - நாட்டில் நிரந்தரத் தீர்வொன்றைக் கொண்டுவரக்கூடியதா? இது போன்ற ஏராளமான கேள்விகள் புதிய ஆண்டின் ஆரம்பத்தில் எழுவது தவிர்க்கமுடியாமலே உள்ளது.

நாட்டில் அமைதியைக் கொண்டு வருவதற்கு, பேரினவாதிகள் ஒருபோதுமே தயாரில்லாதது போலவே இன்றும் செயற்படுகின்றனர். பிழைப்புவாத அரசியல், அரசியலுக்கான போர் இரண்டும் ஒருபோதும் அமைதியையும் அபிவிருத்தியையும் கொண்டு வரப்போவதில்லை. சமாதானத்திற்கான போர் என்ற போர்வையினை நீக்கிவிட்டுப் பார்த்தால், அதற்குள்ளே பதவிகளைத் தக்கவைப்பதற்கான அரசியலுக்கான போர் என்ற உண்மை பளிச்சிடும். இது போன்ற போக்கு இலங்கையின் அமைதியின்மையினை வென்று தருமா? அமைதியை ஏற்படுத்துமா?

ஒடுக்குமுறையாளர்களின் செயற்பாடு வெல்லமுடியாமல்... தமிழரின் போராட்டம் வென்று கொண்டிருக்கும். மக்களுக்குத் தமது உரிமையினைப் பெறுவதற்குப் போராடும் உரிமையுள்ளது என்பது புரியப்பட்டுவிட்டதனால்.... பேரினவாதிகள் - போர் என்றால் போர் என்பதற்குள்ளிருந்து, சமாதானத்திற்கான போரிற்குள் வந்தார்கள். எவையென்றாலும் அது தமிழர் மீதான ஒடுக்குமுறையென்பதை தமிழர் புரிந்துகொள்வதனால், வேறு எவ்வாறான முறையில் கருவறுப்புச் செய்யலாம் என்று எண்ணிய பேரினவாதிகளின் கைகளுக்குக் கிடைத்த ஆயுதம் - சமாதானம், போர்நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம், பேச்சுவார்த்தை, நிரந்தரத்தீர்வு இவை யாவற்றிற்கும் அர்த்தங்கள் வேறு என்பதைக் கவனிக்கத் தவறாதீர்கள். உலகில் பல நாடுகளில் ஒடுக்குமுறைக்கான போராட்டங்கள் வெற்றிகளை ஏற்படுத்தி முன்னேறுகின்ற போது, அங்கெல்லாம் ஒடுக்குமுறையாளர்களுடன் அவர்களுக்கு ஆதரவாக மேற்குலக நாடுகளின் ஒத்துழைப்புடன் போர்நிறுத்தம், சமாதானம் என்ற பெயருடன் தொடுக்கப்பட்ட ஒடுக்குமுறைப்போர் வெற்றி கொள்ளப்பட்டது. இதற்கு நல்ல உதரணமாக நாம் பலஸ்தீனத்தைப் பார்க்கலாம்.

இதில் நாம் எங்களது பக்கங்களைப் புரட்டிக் பார்க்கின்றபோது, சமாதானம் என்ற பெயருடனான ஒடுக்குமுறைப் போரையும் வென்று கொண்டு வருகின்றோம். இதனால், பேரினவாதிகள் திணறடித்துக் கொண்டுள்ளனர்.

பேரினவாதிகளின் உண்மை நிலை புரியாமல், புலிகள் அவர்களுடன் பேசவில்லை.... ஆனால், அனைத்துலக சமூகம் புரிந்தும் புரியாததுபோல அரசிற்கு அரசு என்ற செயற்பாட்டிற்குள்ளிருந்து காய்களை நகர்த்துவதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று புலிகள் செயற்படுகின்றனர்.


இன்று அந்தச் செயற்பாடு நல்ல போக்குடனே செல்கின்றது. மக்களுக்குள்ள சிறுகுழப்பம் - சமாதானமும் இல்லை, போரும் இல்லை. என்ன நடக்கின்றது? என்பதாகும். உயிர் வாழ்தலுக்கான அச்சம் என்றும் உயர் பாதுகாப்பு வலயம் என்பவற்றுக்குள் நீந்திக்கொண்டே உள்ளது. இயல்பு வாழ்வு என்று கதையடிக்கின்றது. ஆனால்... போகிற போக்கைப் பார்த்தால் இயல்பு வாழ்வு என்றால் எப்படியான உள்ளடக்கத்தைக் கொண்டதென்பதற்கே வேறு அர்த்தத்தைத் தரமுற்படலாம். அதற்கான பதில் நடவடிக்கை எவ்வாறானதாக இருக்கும் என்பது காலம் தீர்மானிக்க வேண்டியதெனச் சொல்லி, நானும் தப்பிவிடலாம். மக்களுக்குள் கேள்வியொன்றை இதனூடாக எழுப்புவதன் மூலம் சில பல விடயங்களை ஊகிக்கமுடியுமல்லவா.. கேள்வி இதுதான் - அனைத்துலக சமூகமே இன்றைய அரசியல் பித்தலாட்ட சூழ்நிலையில் தமிழரின் போராட்டம், அதற்கான தீர்வு என்பன பற்றி என்ன கூறப்போகின்றீர்கள்...? தமிழரின் தலைவிதியை தமிழரே தீர்மானிக்கட்டுமென்றால், பேரினவாதிகளுக்கும் அதே நிலையை ஏற்படுத்துங்கள். மூக்கை நுளைத்து விட்டு இவ்வளவு ...... நாறுது என்று மூக்கைப்பொத்தி வெளியில் நின்று பார்க்கும்போதே, பேரினவாதிகளின் போக்குப் புலப் பட்டிருக்கவேண்டும். அவர்களின் போக்கும் உங்கள் நலனும்தான் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படப்போகின்றதென்றால், உலகையே அழிவிலிருந்து காப்பாற்ற முடியாது. அயலகத்தைச் சார்ந்தவர்களுக்கும் இது பொருந்தும்.


துரத்தத் துரத்த ஓடலாம். ஓடுதற்கு இடமில்லையென்றால் திரும்பிப் பாய்வதைத்தவிர வேறு வழியில்லை. தமிழரை இன்னும் எவ்வளவு தூரம் துரத்தப் போகின்றீர்கள்? உலகின் பல ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டங்களின் போதும், முக்கிய போராட்ட அமைப்பைவிட உதிரிகளாக ஒடுக்குமுறைக்கெதிரான போராளிகள் உருவாகி விலை போயுள்ளனர். ஈழவிடுதலைப் போராட்டத்திலும் இதனை நாம் காணுகின்றோம். ஆனால்... ஈழ விடுதலைப் போராட்டத்தில் முக்கிய போராடும் அமைப்பு புலிகள்தானென்பது எந்தக் குழந்தைக்கும் தெரியும். அந்த அமைப்பு ஆயுதத்துடன் உள்நுழையமுற்பட்ட ஒடுக்குமுறையாளர்களை ஆயுதத்துடன் நேரெதிர் நின்று எதிர்க்கும்... ஏககாலத்தில் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பைத் தனியரசுக்குரிய வகையில் செயற்படுத்தி வருகின்றனர். இதனை நாம் தமிழீழ அரசியற்துறை, தமிழீழ காவல் துறை, தமிழீழ நீதிமன்று என அடுக்கிக்கொண்டு போகலாம். இது போன்றவொரு தூரநோக்குள்ள செயற்பாட்டுத்திறன் உலகத்திலேயே ஈழவிடுதலைப் போராட்டத்தில்தான் காணமுடியும்.

இதனை ஒடுக்குவதற்கு கங்கணம்கட்டி நிற்கும் பேரினவாத ஒடுக்கு முறையாளர்கள் - வேட்டி கேட்டவருக்கு கோவணமென்றாலும் கிடைக்காதா? என்றநிலைக்கு தள்ளுவதற்குப் பாடுபடுகின்றனர். இதற்கு தமிழினம் ஒன்றுதிரண்டு தரப் போகும் பதிலென்ன. ஏனென்றால், எமக்குள்ள கடமையினை நாம் செய்வதன்மூலமே தர்மத்தின் வெற்றியைத் தொடர்ந்தும் தக்கவைக்க முடியும் அதன் பயனாக எமது முன்னோர்களின் தியாகமே எமது சுதந்திர வாழ்விற்கு வழி ஏற்படுத்தியதென, எமது எதிர்கால சமூகம் எம்மை நினைவுகூர்ந்து கொள்ளும்.

நாம் யாராக இருக்கப் போகின்றோமென்று ஒவ்வொருவரும் நினைப்பதன்மூலமே, சரியான முடிவை எடுப்பவர்களாக இருப்போம். ஏனோ தானோ போக்கு எமது வாழ்விற்கும் குழிவெட்டும். வலுவாக இருக்கும் போது எவராலும் எதுவுமே செய்ய முடியாது. புதிய ஆண்டில் என்ன மாற்றங்கள் ஏற்படப்போகின்றனவோ தெரியாது. பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு- பொருளாதார நிலையினை இன்னும் பல ஆண்டுகளுக்கு ஆசியாவிலேயே பெரும் வீழ்ச்சிக்குக் கொண்டு செல்வதற்கான செயற்பாடாவே தெரிகின்றது. மொத்தத்தில் வியர்வை சிந்தி உழைக்கும் நாட்டுமக்களின் வரிப்பணம் - மேற்குலகில் சொகுசு வாழ்விற்குப் போகின்றது. (ஏனென்றால் ஆயுத உற்பத்தி, வியாபாரம் ஏராளம் அவர்கள் கைகளிலேயே உள்ளன) புதிய ஆண்டிலென்றாலும், சமாதானம் மூலமான நிரந்தர தீர்விற்கு ஏராளம் செலவு செய்யுங்கள்... புலிகள் சமாதானத்திற்காக கடந்துவந்த காலங்களில் விலை மதிக்கமுடியாத பெரும் தியாகங்ளைச் செய்துள்ளனர். அதில் முக்கியமாகப் பல போராளிகளின் உயிர்களும் அடங்கும். இன்னும் சமாதானத்திற்காகத் தயாராயிருப்பதை பலவீனமாக எண்ணவேண்டாம். புற்கள் வானத்தில் முளைத்தால், தமிழருக்கு இறக்கைகள் முளைக்கும் என்பது ஆச்சரியமான தல்லவே.

ஆகவே ... புதிய ஆண்டில் புதிய சிந்தனைகள் முளைக்கட்டும். அமைதியான வழியில் தமிழருக்கு நிரந்தரத் தீர்வு கிட்டட்டும். சிங்கள தேசம் தனது இறைமையுடன் இருக்கட்டும்





**கனகரவி**

---

# பல்கலைக்கழகங்களுக்கு மாவட்ட அடிப்படையிலேயே மாணவர்களை தெரிவுசெய்யும் நிலை உருவாகியுள்ளது!

## துணைவேந்தர் மோகனதாஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு எமது மாணவர்கள் தெரிவுசெய்யப்படவேண்டும் என்ற நிலைமாறி, இன்று மாவட்ட கோட்டா அடிப்படையிலேயே தெரிவு செய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும் நிலைக்கு எமது கல்விச்சமூகம் மாறியுள்ளது என, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்தார்.

நாவலர் வீதியிலுள்ள தியாகி அறக்கொடை நிலைய இரண்டாம் ஆண்டு நிறைவுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் பொருளாளர் சிறிதேவி ஞானரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - விருந்தினர்களாக சர்வதேச பொருண்மிய மதியுரைஞர் எஸ். சுந்தரமூர்த்தி, யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல், யாழ்.நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், பிரதேச செயலர்கள் க.முருகையா, ஜே.எக்ஸ். செல்வநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்ப்பாணத்தின் பெயரை உலக அரங்கிலேயே ஒரு காலத்தில் பேச வைத்தது எமது கல்விப் பாரம்பரியம்தான். ஆனால், நாம் இன்று கல்விப் பாரம்பரியத்தை இழந்து வருகின்ற நிலையிலுள்ளோம். இதற்கு எமது மண்ணில் நிகழ்ந்த போரும் ஒரு காரணமாக இருக்கலாம்.

போரினால் எமது மக்களின் பொருளாதாரம் சிதைவடைந்து இருக்கிறது. இதனாலும் எமது மாணவர்களின் கல்வி பாதிப்படைய வாய்ப்புள்ளது. இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு வெளிநாடுகளில் வசிக்கும் எமது உறவினர்கள் உதவிபுரிய வேண்டும். அந்த வகையிலே இன்று இந்த நிகழ்வை நடத்திக்கொண்டு இருக்கும் தியாகேந்திரன் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, இன்று எமது மண்ணிலே வெளிநாட்டு நிறுவனங்கள் உதவி செய்கின்றோம் என்ற பாணியிலே கால்பதித்துள்ளன. அவர்கள் உதவி செய்கின்றோம் எனக்கூறி கொடிகளை காற்றில் பறக்கவிட்டபடி வாகனங்களில் ஓடித்திரிகிறார்கள்.

உள்ளூரில் இருப்பவர்கள் உதவி செய்ய முன்வராமையினாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளது. இன்று எமது சமூகத்திலுள்ள பலர் தற்புகழ்ச்சியையும், புகழையுமே எதிர்பார்க்கிறார்கள். சமாதான நீதிவான் பட்டம்கூட இன்று தகுதியற்ற பலருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றியமைக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலையில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு இலவச சீருடைகளும், கணவனை இழந்த வறுமை நிலையிலுள்ள குடும்பப் பெண்களுக்கு உதவுதொகைகளும் வழங்கப்பட்டன. அத்துடன், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த நிறுவனம் மூலம் பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச)

---

# ஆனந்த சங்கரியின் கருத்துக்கு எதிராக தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் அறிக்கை

திடீர் பொதுத் தேர்தல் ஒன்று வந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கில் தனித்தே போட்டியிடுமென்று அதன் தலைவர் வி. ஆனந்தசங்கரி சிங்களத் தினசரியொன்றுக்குக் கொடுத்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.



பேரினவாதத்திற்கு துணைபோகும் மேற்படி சிங்கள தினசரிக்கு கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி தீர்மானத்தை மேற்கொள்ளாது தன்னிச்சையாக அவர் அறிவித்திருப்பது அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியை தனது கைப்பொம்மையாக நடத்த முற்படுவதாகவே கருதவேணடியுள்ளது என தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்பு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளில் தமிழர்களின் ஐக்கியத்தையும், பலத்தையும் வெளிப்படுத்தும் வகையில் எதிர்கால தேர்தல் வியூகம் அமையவேண்டுமென்ற கருத்து வலுப்பெற்று வரும் நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் தெரிவித்திருக்கும் இக்கருத்து அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. அத்தோடு அவரின் உள்நோக்கத்தையும் இது வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

பலரது மனப்பூர்வமான எதிர்ப்புகளுக்கு மத்தியில் தனது நிலைப்பாட்டை அழுங்குப்பிடியாக தக்க வைத்துள்ள இவர் ஏற்கனவே தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்து ஏற்படுத்திய அதிரடி அலைகளுக்கு மத்தியில் தற்பொழுது புதிய சர்ச்சை ஒன்றையும் எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் அந்நிய சக்திகளால் விலை பேச முடியாத அளவிற்கு இன்று வளர்ச்சிபெற்றுள்ளது. ஆனால தமிழ் மக்களின் பாரம்பரிய ஜனநாயகக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியை சிங்கள பேரினவாதிகளின் கைகளில் தாரைவார்க்கவும் அந்நிய சக்திகளிடம் சரணடைய வைக்கவும் நடக்கும் சதியிலிருந்து அக் கட்சியை பாதுகாப்பது தமிழ் மக்களது கடமையாகும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்து போட்டியிடுமானால் தமிழ் மக்கள் தகுந்த பாடத்தைப் புகட்டுவார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு இது தொடர்பாக ஆழ்ந்து சிந்தித்து செயற்பட வேண்டும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்

*திருக்குறள்*

## நமது நோக்கு

### ஆடுகளும், ஓநாய்களும்.

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அவரது பிரதம ஆலோசகர்களுள் ஒருவரான லக்ஷ்மன் கதிர்காமருக்கும் அண்மைக்காலமாக அயலக தேசமான இந்தியாமீதும், இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஏனைய நலன்கள் மீதும் ஏற்பட்டுள்ள தீவிர கரிசனையானது தங்களின் நாட்டின் மீதும், அதன் நலன்கள் மற்றும் பாதுகாப்பின் மீதும் இருக்கிறதா என்பது சந்தேகந்தான்.

அதுவும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தேர்தலில் வெற்றி அடைந்து ஆட்சிப்பொறுப்பை ஏற்றபின்னர், சமாதான நடவடிக்கைகளின் பேரால் அதற்கு சர்வதேச ரீதியில் குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அமெரிக்க சார்பு நாடுகளான அவுஸ்ரேலியா, ஜப்பான், கனடா போன்ற நாடுகளின் அபரிமிதமான அதரவு பெருகத் தொடங்கியதும் தேசிய ரீதியில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் ரணில் அமைதி முயற்சிகளின் அடிப்படையில் தன்னை தனிமைப்படுத்தி ஒரங்கட்டிவிடுவாரோ என்ற இயல்பான பயம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டதையடுத்து அவருக்கு அயலகம் மீதான சுய அரசியல் அபிலாஷைகளின் பேரிலான பாசம் மற்றும் அக்கறை பெருக்கெடுக்க ஆரம்பித்தது.

முன்னதாக, ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையின் இறுதிக்கட்டங்களின்போது விடுதலைப் புலிகளின் சேனை யாழ்.குடாநாட்டின் நுழைவாசலைக் கடந்து யாழ்.மாநகர எல்லையையும் தாண்டி, நகரின் இதயப்பகுதியை அண்மித்துக்கொண்டிருந்தவேளையில் அதாவது குடாநாட்டில் ஆக்கிரமித்து நிலைகொண்டிருந்த இராணுவம் ஒரு மரணப் பொறிக்குள் வீழ்ந்துகொண்டிருந்தவேளையில் அது வரை ல் பெருமளவுக்கு நினைவுக்கே வராமல் இருந்த... அதாவது தேவைப்படும்போது மட்டும் உதவிகோரி யாசகம் கேட்பதற்குப் பயன்படுத்தி வந்த இந்தியாவின் 'கருணை'யை சந்திரிகா பெற்றுக்கொள்ள அதன் காலில் விழ நேரிட்டமைக்கு அப்போதைய சந்திரிகா ஆட்சியின் அப்பட்டமான சுயநலமே காரணமாகும்.

இனப்பிரச்சினை ஆயுதப்போராட்டப் பரிமாணத்தை எடுத்த காலப்பகுதியில் தமிழ் போராளிகளுக்கு உதவிசெய்தமைக்காக இந்தியாவை பேரினவாத அரசுகள் எத்தகைய குரோத உணர்வுடன் விமர்சித்து கண்டித்தன என்பதை விபரிக்க வேண்டிய அவசியமே இல்லை.

அதுமுதல் இந்தியாவையும் இந்திய உதவிகளையும் சிறிலங்காவின் ஆளும் அரசுகள் எப்படியெல்லாம் கௌரவித்து மதித்தன என்பதற்கு இந்திய - இலங்கை உடன்பாட்டுக்காலச் சம்பவங்கள் ஆதாரபூர்வ வரலாற்றுப் பதிவாவே உள்ளன.

இந்திய - இலங்கை உடன்பாடு உண்மையில் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண்பதற்கான - அதாவது தமிழ்மக்களுக்கான அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஒன்றல்ல என்பது உண்மையில் இந்தியா தனது புவிசார் அரசியல் இலாப இலக்குகளை எட்டுவதற்கான ஜே.ஆர்.அரசை இனவிவகாரத்தைக் காரணமாக்கி அடிபணியவைத்து மேற்கொண்ட ஒன்றேயாகும். ஆனாலும் அப்போதைய இந்தியப்பிரதமர் ரஜீவை, ஜே.ஆர். ஜெயவர்த்தனா எதிர்காலத்தில் பெரும் சிக்கலை உண்டு பண்ணபபோகும் விவகாரங்களுள் தந்திரமாகச் சிக்க வைப்பதன் மூலம், மிக நுட்பமான சில உடன்பாடுகளுக்கு ஒப்புதல் அளித்து கையொப்பமிட்டதன் விளைவு இந்தியாவை சிலவரலாற்றுத் தவறுகளை மேற்கொள்ளவைத்தது.

பின்னர் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான - சமாதானத்திற்கான யுத்தத்தின் பேரிலான - பல்வேறு இராணுவ ரீதியிலான பாதுகாப்பு உடன்படிக்கைகளை அரசு மேற்கொண்டது என்பது இந்தியா அறியாததல்ல.

அமெரிக்க, பாகிஸ்தானிய, பிரிட்டிஷ் மற்றும் சீன இராணுவ நிபுணர்களின் வருகைகளும், உளவு அமைப்புக்களின் நிபுணர்கள் வருகைகளும், அவர்களின் நீண்டகால பயிற்சி மற்றும ஆலோசனை நடவடிக்கைகளும், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நோக்கங்களையும் கொண்டிருந்தன. இது சிறிலங்கா அரசுக்கும் தெரியும். அதன் பல வீனங்களைப் புரிந்துகொண்டுதான் - அவற்றைப் பயன்படுத்தி, தமது நோக்கங்களை அடைய இந்த நாடுகள் சிறிலங்காவைப் பயன்படுத்தின என்பது, மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கம் வலுவடைவதை மேற்குறிப்பிட்ட எந்த ஒரு நாடும் விரும்பியது கிடையாது அதேசமயம், இப்பிராந்தியத்தில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் கேந்திர மையப்பகுதியில் இருந்த சிறிலங்காவின்மீது, தமது செல்வாக்கைச் செலுத்த அனைத்து நாடுகளும், உள்ளார்ந்த அவாவைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தியாவும் அறியும்.


இப்போதைய இலங்கை அரசின் இரட்டை ஆட்சியினால் இந்த இருபெரும் மேலாதிக்க முகாம்களையும் - அதாவது இந்தியா மற்றும் மேற்குலகம் ஆகிய இரண்டு சக்திகளையும் அவர்களது உள்நோக்க பலவீனத்தைப் பயன்படுத்தி இலங்கை இன விவகாரம் - சமாதான முயற்சி ஆகியவற்றிற்குள் இழுத்துவிட்டு தமது அரசியல் அனுகூலங்களை நிறைவேற்றிக்கொள்ளவே முனைகின்றனர்.

இப்போதைய ஜனாதிபதியினதும் அவரது ஆலோசகர்களினதும் இந்தியா மீதான அக்கறையும் இந்த நோக்கிலானதே...

அதேபோல் ரணிலின் மேற்குலகூடான நெருக்கமும் இத்தன்மை கொண்டதே...

ஆடுகள் நனைகின்றன என்று ஓநாய்கள் அழுகின்றன அவ்வளவுதான்.

## நாடும் நடப்பும்




*செய்தி* :-சமாதான முயற்சிகளை முன்னெடுத்தல் தொடர்பாக ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து பேச ரணிலுக்கு சந்திரிகா மீண்டும் அழைப்பு.

### இந்துகலாசார அமைச்சால்

# பதவி நீக்கம் செய்யப்பட்டமை மனித உரிமை மீறும் செயல்

### விசாரணைகள் நடத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சினால்தான் பதவி நீக்கப்பட்டமை மனித உரிமைமீறல் எனத் தெரிவித்து, வடகடல் நிறுவன முன்னாள் ஊழியர் ஒருவர், யாழ். மனித உரிமை ஆணைக் குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்

வடகடல் நிறுவனத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கடமை புரிந்த சி.மெல்க்கியூஸ் என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது -

இந்து கலாசார அமைச்சு - வடகடல் நிறுவனத்தைப் பொறுப்பேற்றதும், அதனை அபிவிருத்தி செய்வதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக ஆட்குறைப்பு செய்வதாகத் தெரிவித்து, கடந்த ஐந்து ஆண்டுகளாக அங்கு காவலராகக் கடமையாற்றிய என்னை வேலையில் இருந்து நீக்கியுள்ளது.

இதுதவிர, மேலும் பத்துப்பேர் குறைந்த சம்பளத்துடன் வேலையில் இருந்து இடைநிறுத்தப்படிருந்தனர். இவ்வாறு வேலையிலிருந்து நிறுத்தியதற்குப் பதிலாக, இந்து கலாசார அமைச்சருக்கு வேண்டப்பட்டவர்கள் சிலர் இங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டு வருகின்றனர்

இதன் முதற்கட்டமாக - காவலர், அலுவலர், மின்சாரப் பகுதி ஊழியர் முதலான பதவிகளுக்கென மூவர் வடகடல் நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்டனர்.

நீண்டகாலம் பணியாற்றியவர்களைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, தமக்கு வேண்டப்பட்டவர்களை வேலைக்கு அமர்த்துவது பாரிய மனித உரிமை மீறலாகும். இதனைத் தாங்கள் கவனத்திற்கொண்டு, சரியான தீர்வைப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ப)

# ஜனவரி மாதத்திலேயே அதிகளவான குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன!

### பொலிஸார் தெரிவிப்பு

கடந்த வருடம் ஜனவரி மாதத்திலேயே அதிகமான குற்றச் செயல்கள் குடாநாட்டில் நிகழ்ந்துள்ளதாக - யாழ்.நீதிவான் நீதிமன்ற பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர். குடாநாட்டில் நிகழும் குற்றச்செயல்களின் எண்ணிக்கையும் தற்பொழுது குறைவடைந்துகொண்டு வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளை அடிப்படையாகவைத்தே, இந்தத் தகவலை அவர்கள் தெரிவித்தனர். மாதாந்தரீதியாக நடைபெற்ற வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு - ஜனவரி 381, பெப்பரவரி 341, மார்ச் 224, ஏப்பிரல் 224, மே 244, யூன் 185, யூலை 224, ஓகஸ்ட் 126, செப்ரம்பர் 151, ஒக்ரோபர் 144, நவம்பர் 149, டிசம்பர் 169.

கடந்த வருடம் போக்குவரத்து விதிமுறைகளை மீறியது தொடர்பான வழக்குகளே அதிகமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ன. இவ்வாறாக 1164 வழக்குகள் பதிவு செய்யப்படடுள்ளன. பெப்ரவரி மாதத்திலேயே போக்குவரத்து விதிகளை மீறியது தொடர்பான அதிகமான வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடம் பதிவுசெய்யப்பட்ட ஏனைய வழக்குகளின் விபரம் வருமாறு -

குற்றவியல் தொடர்பான வழக்குகள் 191. இது தொடர்பாக ஒக்ரோபர் மாதாத்திலேயே அதிகமான வழக்குகளாக 25 வழக்குகள் பதிவு செய்யபட்பட்டுள்ளன. கசிப்பு உற்பத்தி மற்றும் சட்டவிரோத மது விற்பனை என்பன தொடர்பாக 808 வழக்குகளும், தாபரிப்பு மற்றும் விவாகரத்து தொடர்பாக 64 வழக்குகளும், சிவில் விடயம் தொடர்பாக 62 வழக்குகளும், காணிப் பிணக்குகள் தொடர்பாக 14 வழக்குகளும் கடந்த வருடம் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

போக்குவரத்து விதிமுறைகளை மீறுவது தொடர்பான வழக்குகள், தற்போது மிகவும் குறைவடைந்து வருகிறது. இந்த விடயம் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருப்பதாக போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் முன்னிற்க வேண்டும்!

### நிர்வாக முகாமைத்துவ அமைச்சு அறிவுறுத்து

யாழ்.மாவட்டத்தில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த, உடன் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சு அரச அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வருடத்திற்கான மிக முக்கிய செயற்பாட்டுத்திட்டம் குறித்து, அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சு - யாழ்.மாவட்ட அரச காரியாலயங்களுக்கு விடுத்த அறிவுறுத்தலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அண்மைக்காலமாக நாட்டில் சூழல் மாசடைதலுக் கான மிகமுக்கிய காரணியாக மாறிவருவது, பொலித்தீன் பொருட்களின் பாவனையாகும்.

இவை நீர் தேங்கவும், நிலத்தில் இரசாயனத் தன்மையை உருவாக்கவும் வழிவகுத்து, பல்வேறு வழிகளில் சூழல் மாசடைவதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

இது - யாழ்.மாவட்டத்திலும் சூழல் அச்சுறுததலாக அதிகரித்துவருவதால், அதனைக் 'கட்டுப்படுத்தும் பாரிய பொறுப்பினை அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பிரதேச செயலகங்கள், கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் முதலானவை பெற்றிருக்கின்றன.

மிக முக்கியமாக - பாடசாலை ரீதியாகவும், கிராமம், நகரம் என்ற பாகுபாடின்றி மக்கள் மத்தியிலும் இந்தப் பொலித்தீன் பாவனையின் தீங்குபற்றி விளக்கமளிப்பதோடு, அரச கட்டடங்களுக்குள்ளும் இத்தகைய பொலித்தீன் பாவனைகளைத் தடைசெய்துகொள்வது சிறப்பானதாகும் எனவும் அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து, யாழ். செயலகத்தினால் அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக யாழ்.செயலக அதிகாரி தெரிவித்தார். (ப)

## ஒரு கல்விக்களச் சுற்றுலா அனுபவக் கட்டுரை - பகுதி 2 -

# இன முரண்பாட்டின் விளைவுகள்; ஆய்வுக்கு தயார் நிலையில் வட பகுதி...

முகமாலையைத் தாண்டிச் சென்றால் எங்கும் யுத்தத்தின் கொடூரங்களே காட்சி தருகின்றன. எங்கு பார்த்தாலும் கண்ணிவெடிகளின் அபாயம். நிமிர்ந்துநின்ற சாவகச்சேரி நகரம் முற்றாக அழிந்து கிடக்கிறது. ஒரு காலத்தில் 'யாழ் தேவி' ரயில் சேவை என்றால் எவ்வளவு புகழ் பெற்றிருந்தது. ஆனால், இன்று யாழ். குடாநாட்டுக்கான ரயில்சேவை ஒன்று இடம்பெற்றதற்கான தடயமே தெரியவில்லை. உடைந்துபோன சாவகச்சேரி புகையிரத நிலையத்தின் ஓரிரு இரும்புக் கம்பிகளைக் கண்டபோதுதான், இதன் வழியாகத்தான் ரயில் பயணித்திருக்கும் என அனுமானிக்கமுடிந்தது. யாழ். குடாநாடு இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதற்கு ஆங்காங்கே நின்ற இலங்கை இராணுவ வீரர்களும் இராணுவ முகாம்களும் சாட்சி பகர்ந்தன.

இன முரண்பாட்டின் கோர விளைவுகளை கண்களில் நிரப்பிக்கொண்டு யாழ். நகரை அடைந்தபோது, முரண்பாட்டு விளைவின் மொத்தவடிவமாக யாழ். நகர் காட்சி தந்தது. எங்கும் உடைந்த கட்டடங்கள், நிம்மதி இழந்த மனித முகங்கள். ஆனாலும், யாழ். மாநகரம் இயங்கிக்கொண்டுதான் இருந்தது. யாழ். மண்ணில் கால் பதித்தபோது உள்ளமெல்லாம் சந்தோசக் கடலில் குதித்தன. ஏனெனில் எங்கள் எல்லோருக்கும் அது முதலாவது பயணம்.

அனுவலக ரீதியாக யாழ். பல்கலைக் கழகத்துடன் தொடர்புகொண்டிருந்ததனால், தங்குமிட வசதிக்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்துதந்தார்கள். அன்றிரவு எங்களால் நிம்மதியாக உறங்கமுடிந்தபோதும் யுத்த சூழ் நிலையில் யாழ். மக்களின் வெடிச்சத்தங்களோடு கலந்த தூக்கத்தை ஒரு தடவை கற்பனை செய்துபார்த்தபோது கவலைகள் நெஞ்சை அடைத்தன.

மறுநாள் காலை யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர்களுடனும் இறுதி வருட அரசறிவியல் துறை மாணவர்களுடனும் நாங்கள் ஒரு கலந்துரையாடலை நடத்துவதற்கான அனுமதியை முன்னரே கோரியிருந்தனர். அதற்கான ஏற்பாடுகளை திணைக்களத் தலைவரும் விரிவுரையாளர்களும் செய்திருந்தனர். சிரேஸ்ட விரிவுரையாளர் சகாயசீலன் மற்றும் விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோரும் மாணவர்களும் எம்முடனான சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சிரேஸ்ட விரிவுரையாளர் சகாயசீலன் இவ்வாறான ஒரு கல்விச் சுற்றுலாவினை ஏற்பாடுசெய்து, இன முரண்பாட்டின் மற்றும் அரச பயங்கரவாதத்தின் கோரவிளைவுகளைப் பற்றிய அனுபவ அறிவினைப்பெற வந்துள்ள விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் வரவேற்று ஒரு அறிமுக உரையை ஆற்றினார்.

சுற்றுலா ஏற்பாட்டாளரான விரிவுரையாளர் எம்.ஏ.ஜப்பார் அவர்கள் தனது ஆரம்ப உரையில் சுற்றுலாவின் நோக்கத்தினைத் தெளிவுபடுத்தினார். இன முரண்பாடு, மற்றும் அரச பயங்கரவாதத்தின் விளைவுகளையும் - அவ்வாறே இன முரண்பாட்டின் தீர்வுக்காக தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாகசபை குறித்த அவதானம் அல்லது தமிழ் மக்களின் உணர்வுகளைக் குறித்த தெளிவினைப் பெறும் நோக்கிலும் இந்தக் கல்விக்களச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டினார்.

இது குறித்து விரிவுரையாளர் கணேசலிங்கம் தனது கருத்தினைத் தெளிவுபடுத்தும்போது - அரச பயங்கரவாதம், அரச வன்முறை என்பனவற்றை நாங்கள் நிறைய அனுபவித்துவிட்டோம். இன்றும் கூட அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். பெரும் எண்ணிக்கையிலான எமது மக்களை, மாணவர்களை இழந்திருக்கின்றோம். இவற்றுக்கெல்லாம் அரச பயங்கரவாதமே பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறது. இன்று தமிழர்கள் தமது உள் முரண்பாடுகளை மறந்துவிட்டு ஒரு தனியான அரசை ஒழுங்கமைத்துக் கொள்ள போராடுகிறார்கள் என்றால், அதற்கு அரச பயங்கரவாதமே முக்கிய காரணமாகும். உண்மையில் தனி நாட்டுக்கான நியாயப்பாடுகளும் எதிர் நியாயப்பாடுகளும் உண்டு. நாங்கள் சிங்கள மக்களை நேசிக்கின்றோம். ஆனால், ஆட்சியாளர்கள் தமிழ் மக்களைத் திட்டமிட்டு நசுக்குகிறார்கள். ஒரு போர் வீரன் இன்னொரு போர் வீரனை எவ்வாறு மதித்தான் என்பதற்கு - யுத்த காலத்தில், கோப்பாயிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லத்தினை இலங்கை இராணுவத்தினர் புல்டோசர் கொண்டு அழித்த சம்பவமே போதுமானதாகவுள்ளது. யுத்தம் தமிழ் சமூகத்தில் அழியாத வடுக்களை ஏற்படுத்திவிட்டிருக்கிறது என்றார்.

யுத்த நிறுத்த சூழ்நிலை பற்றி விபரித்த விரிவுரையாளர் கணேசலிங்கம், யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி (MOU) 180 நாட்களுக்குள் முழு இராணுவ முகாம்களும் அகற்றப்படவேண்டும். ஆனால், உயர் பாதுகாப்பு வலயத்தைக் காரணங்காட்டி, தமிழ் மக்களின் அடிப்படை வாழ்விட உரிமை மறுக்கப்படுகின்றது என்றார். உண்மையில் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு சர்வதேச அரசியல் சூழலே காரணமாக இருந்தது. MOU சர்வதேச மட்டத்தில் பெரும் செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. குறிப்பாக அமெரிக்காவுக்குப் பிராந்திய ரீதியில் தமது நாடு முக்கியத்துவம் உடையதாக இருந்ததால், MOU ஐ ஏற்படுத்துவதில் அவர்கள் அதிக அக்கறை காட்டினார்கள். ஒரு வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தகாலம் வடக்கு - கிழக்கு மக்களுக்கு மிக ஆபத்து மிக்க காலமாகும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் சட்டரீதியான முறையின் கீழ் கைச்சாத்திடப்பட்டதா என்பதும் பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது. இலங்கை ஜனாதிபதியை விடுத்து பிரதமர் எவ்வாறு கைச்சாதிடுவார் என்ற கேள்வி இன்றும் விடையளிக்கப் படாமலேயே உள்ளது. ஆனாலும் யுத்த நிறுத்த வெற்றிக்கு முஸ்லிம் அரசியல் தலைவர்களின் பங்களிப்பும் முக்கியத்துவம் பெறுகிறது. MOU வின் பின்னரான பிரபா - ஹக்கீம் ஒப்பந்தம், தமிழ் - முஸ்லிம் புரிந்துணர்வுக்கு மேலும் வழிகோலியுள்ளது என்றார்.

இன்று முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாகசபை குறித்த விடயங்களை நோக்கும்போது அது தமிழ் மக்கள் எதிர் பார்த்ததைவிட மிகவும் பலவீனமானதே. இதைவிட அன்று சந்திரிகா முன்வைத்த தீர்வுத் திட்டம் சற்று வலுக் கூடிய அதிகாரப்பகிர்வு முயற்சி என்பது நோக்கத்தக்கது.



**எம்.ஏ.ஜப்பார் (விரிவுரையாளர்)**
**அரசறிவியல் பிரிவு,**
**சமூக விஞ்ஞானங்கள் துறை,**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**ஒலுவில்.**

உண்மையில் சிங்கள அரசாங்கங்கள் அரசியல் ரீதியாகத் தம்மை பலப்படுத்தவே முயற்சிக்கின்றன. எனவே, இவர்களின் முயற்சி குறித்து சந்தேகிக்க வேண்டியிருக்கின்றது. எனவே ஒரு விபத்துக்காக இந்த யுத்த நிறுத்தம் காத்துக்கொண்டிருப்பதைப் புரிய முடிகிறது என்று தனது கருத்துக்களை விரிவுரையாளர் கணேசலிங்கம் முன்வைத்தார்.

இதன்போது விரிவுரையாளர் எம்.ஏ.ஜப்பார் அதிகாரப் பரவலாக்கம் குறித்த சில விளக்கங்களை முன்வைத்து, நிர்வாக ரீதியான அதிகாரப் பகிர்வின் அவசியத்தை வலியுறுத்தினார். இதனை ஆமோதித்த விரிவுரையாளர் கணேசலிங்கம் - அரசியல் ரீதியான பரவலாக்கலையே எல்லா அரசாங்கங்களும் வழங்க முயற்சிக்கின்றன என்றும், நிர்வாக ரீதியான சிக்கல்களே உண்மையில் அரசியல் முரண்பாடுகளுக்குக் காரணமாக அமைந்தன என்றும், இது ஒரு தந்திரோபாய ரீதியான கையாளுகை என்றும், உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப தீர்வுகளை முன்வைக்க அரசியல் உயர் வர்க்கம் இடம்கொடுக்கவில்லை என்றும், தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். தவிர இலங்கையில் வன்முறைகள் தோன்றக் காரணமாக இருந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு 1990 இல் நியமிக்கப்பட்ட 5 பேர் அடங்கிய குழுவின் இறுதி அறிக்கையின் விடயங்களையும் நினைவுகூர்ந்தார்.

சுற்றுலாவில் சென்ற தென்கிழக்கு பல்கலைக்கழக அரச அறிவியல் விசேட துறை மாணவன் அலிமுடீன் - தீர்வு முயற்சியில் முஸ்லிம்கள் புறமொதுக்கப்படுவது குறித்தும், அவர்களின் நலன்குறித்தும் தமிழ் புத்திஜீவிகளது ஆதரவுதேவை என்பது குறித்தும், தனது கருத்துக்களை முன்வைத்தபோது,

விரிவுரையாளர் கணேசலிங்கம் - முஸ்லிம்களும் தமிழர்களும் ஒரே இனப்பிரிவினர்தான் என்றும், தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்துப்பார்க்கும் ஓர் அரசியல் இருக்கிறது என்றும், முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை பலவீனமாக்கவும் அவர்களைப் பயன்படுத்தும் ஒரு பிரிவினராகவுமே பலரும் உள்ளனர் என்பதைத் தாம் உணருவதாகவும் சுட்டிக்காட்டியதோடு, யாழ்ப்பாணம் மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகங்கள் சேர்ந்து இரு சமூகத்தினரிடையேயும் இன உறவை வளர்க்க முயற்சிக்கவேண்டும் என்றும் தனது ஆலோசனைகளையும் முன்வைத்தார். தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் அவரது கருத்தை ஏற்று, அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் உறுதிபூண்டனர்.

முஸ்லிம்களின் நலன் விடயத்தில் கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட விரிவுரையாளர் சகாயசீலன் - முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் சோனகத் தெருவில் செல்வச் செழிப்புடன் இருந்ததை நினைவுகூர்ந்ததோடு, வடமாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம் குறித்துத் தனது மனவருத்தத்தையும் தெரிவித்தார். ஆனாலும், வடமாகாண முஸ்லிம்களை தமிழர்கள் மீண்டும் ஏற்றுக்கொண்டதுபோல், கிழக்கின் தமிழர்களை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கசப்பான கருத்துத் தமிழர்கள் மத்தியில் நிலவுகின்றது என்ற விடயத்தையும் சுட்டிக் காட்டினார். இது குறித்து விளக்கமளித்த தென்கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் - கிழக்கில் தமிழர்களுடன் முஸ்லிம்கள் என்றும் சுமூக உறவுடனேயே வாழ்கின்றார்கள் என்றும், சகோதர சமூகமாகவே அவர்களை முஸ்லிம்கள் நோக்குகிறார்கள் என்றும் வலியுறுத்தினர்.

முஸ்லிம்களின் நலன்குறித்த விடயத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவன் - தனது ஆய்வுக் கட்டுரையின் நோக்கில், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது, அவர் கூறிய சில கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார். அதாவது முஸ்லிம்களின் நலன் குறித்து சகோதர நோக்கில் புலிகள் நோக்குவதாகவும் முஸ்லிம்களின் ஒற்றுமையை, உறவைப் பலப்படுத்தும் நோக்கில் செயற்படவேண்டும் என்றும் உரியகாலத்தில் அதாவது விடுதலை முடிவாகக் கிடைக்கும்போது முஸ்லிம்களுக்குரிய சகல உரிமைகளையும் வழங்கப்படும் என்றும் இதற்கான சில ஏற்பாடுகளைத் தாம் செய்திருப்பதாகவும் (உதாரணமாக : பிரபா - ஹக்கீம் ஒப்பந்தம்) தமிழ்ச்செல்வன் கூறியதாக தமது அனுபவத்தை அந்த மாணவன் பகிர்ந்துகொண்டான்.

*(அனுபவம் தொடரும்)*

## செய்திக் கட்டுரை

# யாழ் குடாநாட்டில் இன்று அதிகரித்துவரும் வீதிவிபத்துக்கள்

இன்று யாழ். குடாநாட்டில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை, நாளுக்குநாள் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. ஏ - 9 வீதியூடான வாகன சவாரி இன்று கிராமங்கள், நகரங்களுக்கும் தொற்றியுள்ளது என்று கூறுவதில் ஐயமில்லை. வீதிகள் திருத்தும் பணிகள் இடம்பெற்றாலும் அவை எப்போது திருத்திமுடியும் என்பது தெரியாது.

இந்தவகையில் மனித இழப்புக்கள் இன்னும் அதிகரிக்குமா என்ற பயம் பயணிகள்மீது தொற்றியுள்ளது.

கையில் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுவிட்டால்போதும், அதனை வைத்து வாகனத்தை எப்படியும் செலுத்தலாம் அல்லது காவல்அதிகாரிகளுக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு, தப்பிவிடலாம் என்ற துணிவு ஓட்டுநர்கள் மத்தியில் பிறந்துள்ளது.

பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகன ஓட்டுநர்களும் நடத்துநர்களும் இன்று பணத்தையே பெரிதும் விரும்புகின்றனர். எவ்வளவுக்கு எவ்வளவு பயணிகளை உள்ளே திணிக்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு வருமானத்தில் திளைக்கிறார்கள்.

காவல் அதிகாரிகளைக் காணும் போதுமட்டும் உள்ளே திணிப்பும், பின் ஏறும்படியில் உல்லாசமுமாக



வாகனச் சவாரி நடைபெறுகிறது.

கடந்த சிலவாரங்களுக்கு முன் நெல்லியடியில் இருந்து கொடிகாமம் நோக்கிவந்த முக்கிய சேவையில் உள்ள பேருந்து, வரணியை அண்மித்தபோது, பேருந்தில் பயணித்த இளைஞன் ஒருவன் கீழேவிழுந்து மயிரிழையில் உயிர்தப்பினார்.

இதற்கு ஓட்டுநரும் நடத்துநரும் தங்கள் கடமை அது என்றும், எவ்வளவு பயணிகள் என்றாலும் ஏற்ற வேண்டும் என, தங்கள் நிறுவனத்தின் கட்டளை என, நிறுவனத்தின் மீது பழியைச் சுமத்துகிறார்கள்.

பேருந்து நிறுவனங்கள் சரியான முறையில் ஓட்டுநர்களுக்கும் நடத்துநர்களுக்கும் விளக்கம் வழங்க வேண்டிய கடமையுண்டு, இல்லை எனில் வீதி விபத்துக்களால் இழப்புக்கள் அதிகரிக்கவே செய்யும்.

வாகன ஓட்டுநர்கள் - தங்களுக்குள் பல சமிக்ஞை முறைகளைப் பயன்படுத்தி காவல்துறையினரிடமிருந்து தப்பிவிடுகிறார்கள். இதற்கு முழுமையாக வாகன ஓட்டுநர்களை குறைகூறமுடியாது.

வீதியில் செல்லுகின்ற மனிதர்களிடமும் பிழை இருக்கத்தான் செய்கின்றது. பாடசாலை மாணவர்கள் கூட்டம் கூட்டமாக வருவதும், இளைஞர்கள் கூட்டமாக வீதியில் நிற்பதுவும் வீதிவிபத்துக்கள் அதிகரிக்கும் வாய்ப்புக்களை உருவாக்குகின்றன.

வீதிப் பாதுகாப்பில் உள்ள காவல் அதிகாரிகள் இந்தச் சம்பவங்களை கண்டும் காணாததுபோல் விடும் மர்மம் என்ன? அதுவும் பிரதான வீதியில் மட்டும் வாகன சாரதிப்பத்திரம் பார்க்கப்படுகின்றதே தவிர ஏனைய இடங்களில் கைவிடப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

போக்குவரத்து வீதியில் நின்றுகொண்டே கேலிச் செயல்கள் புரியும் இளவட்டங்களாலும் இந்த விபத்துக்கள் இடம்பெறக்கூடும். இடம்பெற்றும் இருக்கின்றன.

ஓட்டுநர்கள் பயணிகளை ஏற்றும் போது மட்டும்தான்பொறுமை. இறக்கும்போது அவசரமாகவே வாகனத்தை எடுக்க முனைகிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது பயணிகளே!

அத்துடன் அதிகளவான பயணிகளை ஏற்றவேண்டும் என்ற நோக்கிலும், அரச பேருந்தில் பயணிகள் ஏறுவதற்கு முன் அவர்களைத் தாம் ஏற்றவேண்டும் என்ற நோக்கிலும் தனியார் பஸ் ஓட்டுநர்கள் பலர் அதிவேகமாக வாகனத்தைச் செலுத்துகிறார்கள். வேகமாகச் செல்லும் பேருந்தினால், வீதியால் வருவபவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டியிருப்பதுடன், பேருந்திற்குள் இருப்பவர்களும் அச்சத்துடனேயே அமர்ந்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இன்று வைத்தியசாலைகளில் சிகிச்சைபெறுபவர்களில் கூடுதலானோர். வீதிவிபத்தில் காயமடைந்தவர்கள் என்று, கூறப்படுகின்றது.

எனவே, மனித இழப்புக்குள் அதிகரிக்கவேண்டுமா அல்லது குறைய வேண்டுமா என்பதை நிர்மானிக்க வேண்டிய பொறுப்பு அந்த அந்த துறைசார்ந்தவர்களின் கட்டாய கடமையாகும்.

**க.தே.புரட்சிதாஸன்**

# ஈராக்கிலுள்ள 506 கைதிகளை விடுவிக்க அமெரிக்கா இணக்கம்



ஈராக்கில் 506 கைதிகளை நல்லெண்ண நோக்கில் விடுதலை செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக ஈராக்கின் அமெரிக்க நிர்வாகியான போல்பிரிமர் தெரிவித்துள்ளார். முதல் கட்டமாக 100 கைதிகள் இன்று விடுவிக்கப்படவுள்ளனர். ஈராக்கில் தேடப்பட்டுவரும் குற்றவாளிகளை கைதுசெய்வதற்கு 200,000 டொலர்வரை வழங்கும் திட்டமொன்றையும் தெரிவித்துள்ளார். இதனிடையே, அமெரிக்க கூட்டுப்படையினரால் 10,000 இற்கு மேற்பட்ட ஈராக்கிய கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

விடுதலைசெய்யப்படவுள்ள ஈராக்கியர்களை, விரோதங்களை மறந்து மீண்டும் தமது குடும்பத்துடன் இணைந்து வாழ்வதற்கு வழி அமைத்துள்ளதாகவும் போல்பிரிமர் தெரிவித்தார்.

கொலைக்குற்றம் சுமத்தப்பட்டவர்களும், காயங்களை விளைவித்தவர்களும், விடுதலை செய்யப்படமாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# இஸ்ரேல் படையினர் தாக்குதல் மூன்று பலஸ்தீனர்கள் பலி

இஸ்ரேலின் மேற்குக் கரைப் பிரதேசமான துல்காரம் பகுதியிலும் நப்லஸ் பகுதியிலும் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட இருவேறு தாக்குதல்களில் மூன்று பலஸ்தீனர்கள் நேற்று கொல்லப்பட்டனர்.

துல்காரம் பகுதியில் சந்தேக நபர்களை கைது செய்யமுற்பட்டபோது, இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். இவர் கமாஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர் என இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.


அடுத்த சம்பவம், நப்லஸ் பகுதியில் இடம்பெற்றது. இங்கு நடந்த முற்றுகையின்போது, இரண்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இவர்கள் அல் அக்ஷாதியாகிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த இரு சம்பவங்களிலும் 24 பேர் சந்தேகத்தின் பேரில் இஸ்ரேலியப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஒன்பது நாட்களில் 12க்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.




# டொமினிக்காவின் பிரதமர் இருதய நோயால் மரணம்



கடந்த 3 ஆண்டுகளாக ஆட்சிசெய்து வந்த கபரியன் தீவான டொமினிக்காவின் பிரதமர் "பீறி சார்லஸ" 49 ஆவது வயதில் காலமானா. இவர் கடந்த சில காலமாக இதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

நாடாளுமன்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட நேரத்தில், நெஞ்சுவலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்தார். மக்கள் கவலையுடன் வைத்தியசாலையின் முன் குழுமியிருந்ததாகவும், அந்நாட்டின் தேசிய வானொலி வழக்கமான நிகழ்ச்சிகளை நிறுத்தி சோக கீதத்தினை ஒலித்துக் கொண்டிருந்ததாகவும், தெரிவிக்கப்பட்டது.

"பீறி சார்லஸ" டொமினிக்காவின் தொலைக்காட்சியின் தலைவராக கடமையாற்றினார். இவர் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பதவியேற்றார்.

அண்மைக்காலங்களில் கியூபாவிற்கு எதிரான தடையை அமெரிக்கா நீக்கவேண்டுமென கருத்து தெரிவித்துள்ளார். மேலும், அமெரிக்காவின் ஈராக் மீதான ஆக்கிரமிப்பை கண்டித்து வந்துள்ளார்.

## பிரதமர் வாஜ்பாய் - ஜனாதிபதி முஷாரப்பின்

# காஷ்மீர் தொடர்பான முயற்சிகளுக்கு உலகத் தலைவர்கள் வரவேற்பு

இந்தியாவின் எல்லைப் பிரதேசமான காஷ்மீரின் பிரச்சினை தொடர்பாக, இரு நாட்டுத் தலைவர்களும் எடுத்துவரும் முயற்சிகளுக்கு உலகத் தலைவர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளார்கள்.



இது ஒரு அதிசயமான செய்தியென ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் கோபிஅனான் தெரிவித்தார்.

மேலும், இவ் இரு தலைவர்களும் தமது இராஜதந்திரத்தையும் விவேகத்தையும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உபயோகிப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

இதனிடையே, தற்போது பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் நடைபெற்றுவரும் சார்க் நாடுகளின் உச்சிமாநாடு முடிவடைந்ததும் காஷ்மீர் தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.



மேலும், இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் பிரிவினைவாத அரசியல் தலைவர்கள் எச்சரிக்கைமிக்க வரவேற்பினை இது தொடர்பாக தெரிவித்துள்ளார்கள்.

மேலும், காஷ்மீரின் தீவிரவாதக் குழுக்கள் இந்தியாவிற்கெதிரான தாக்குதல்கள் தொடரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

# சுவீடன் வெளிநாட்டமைச்சர் கொலை; சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்!

சென்ற மாதம் பல்பொருள் அங்காடி ஒன்றில் கத்திக்குத்துக்கு இலக்காகி பின் வைத்தியசாலையில் மரணமடைந்த, சுவீடன் நாட்டு வெளிநாட்டமைச்சர் "அனாலின்ட்" இன் கொலைச் சந்தேக நபரான "மிஜெலொவிக்" கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாக அவரது வழக்கறிஞர் "பீற்றர் அற்றில்" தெரிவித்தார்.



பொலிஸாரின் அறிக்கைகளை மையமாகக் கொண்டு விசாரணைகளை மேற்கொண்டிருந்தவேளையில், தானே கொலையாளி என்பதனை ஒப்புக்கொண்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.

25 வயதுடைய யூகோஸ்லாவியாவை பிறப்பிடமாகக் கொண்ட சுவீடன் பிரஜையான மிஜொலெவிக் ஆரம்பத்தில் கொலைக் குற்றத்தை மறுத்திருந்தார்.

ஆனாலும், கொலை நடைபெற்ற இடத்தில் காணப்பட்ட தடயப் பொருட்களின் பரிசோதனையில் அவர் மீது சந்தேகம் வலுவடைந்திருந்தது குறிபிடத்தக்கதாகும்.



# ஊர்சுற்றி எழுதுவது

"பூனை எலி பிடிக்கும்"

பாலர் வகுப்பில் அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்பு சொல்லித் தந்த பாடம் இது. இப்படி இன்னும் பல பாடங்கள்.

பாலபாடப் புத்தகத்தில் பூனையின் படமும், அதற்கு முன்னால் எலி ஒன்று பாய்ந்தோடும் படமும் இருக்கும்.

இப்பொழுது பாலர் பாடப்புத்தகம் இருக்கிறதோ இந்தப் பாடமும் இருக்கிறதோ தெரியவில்லை.

ஆனால், சிலவருடங்களுக்கு முன் பல வருடங்களாகவும் இருக்கலாம்.

"படம் பார் - பார் படம்" என்று பாலர் வகுப்பில் பாடமுறை மாற்றம்பெற்றது.

பிள்ளைகள் பலரும் பாடம் படித்தார்களோ இல்லையோ படம் பார்த்தார்கள் - இன்றும் படம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். தினமும் தொலைக்காட்சிகளில் ஏதாவதொரு அலைவரிசையில் ஒன்று அல்லது இரண்டு திரைப்படங்கள் பார்த்துக்கொண்டுதானிருக்கிறார்கள்.

நான் சொல்ல வந்த பூனைக் கதை வேறு! சீனாவில் பூனைக்கறிக்கு நல்ல மவுசு!

சீனாவில் மட்டுமல்ல தமிழ் நாட்டில் நரிக்குறவர் என்று ஓர் சமூகம் இருக்கிறது. இந்தச் சமூகத்திலிருந்து இப்பொழுது ஒரு சிலர் கல்விகற்று நன்றாக முன்னேறிவருகிறார்கள்.

இந்தக் குறவர்களில் சிலர் வேட்டைக்குப் பழக்கிய நாய்களோடு புறப்பட்டுச் செல்வார்கள். காட்டுப்பகுதிக்கு வேட்டைக்குச் செல்வதற்கு முன் வீடுகள் நெருக்கமாக இருக்கும் பகுதிகளுக்குப் போவார்கள். எங்கேயாவது ஒரு பூனையைக் கண்டால் வளையம் கொழுவிய கம்பியை அதன் கழுத்தில் மாட்டிக் கையிலுள்ள சாக்குப் பைக்குள் திணித்துக் கொண்டு போய்விடுவார்கள்.

பூனைகளுக்கு இந்தக் குறவர்களை கண்டாலே மூக்கு வியர்த்துவிடும் போலும் ஒரு சீறுசீறி விட்டுப் பாய்ந்தடித்து மரங்கள் மேலேயோ வீட்டுக் கூரைகள் மேலேயோ ஏறி உச்சத்துக்குப் போய்த் தப்பித்துக்கொள்ளும்.

பூனை மரத்தின் மீது எவ்வளவு விரைவாகப் பாய்ந்தடித்து ஏறுகின்றதோ அதைவிட வேகமாக அவர்களோடு வரும் வேட்டை நாய்கள் பாய்ந்து பூனையைக் கௌவிப் பிடிப்பதையும் காணலாம்.

குறவர்களுக்குப் பூனை கிடைத்துவிட்டால் நம்மவர்களுக்குள் சிலருக்கு நல்ல வேள்விக் கிடாய் கிடைத்த மாதிரித்தான்!

சீனர்களுக்கும் பூனைக்கறி விசேடமாகத் தானிருக்குமென்று நினைக்கிறேன். எங்களில் பலர் முயல் இறைச்சியைச் சுவைத்துச் சாப்பிடுவார்கள். பூனையும் கிட்டத்தட்ட முயல்போலத்தானே இருக்கிறது. ஒருவேளை, சீனர்களுக்கு இதைவிடப் பாம்பு சுவையாக இருக்கலாம் எனக்குத் தெரியாது.

தெற்காசிய நாடுகள் பலவற்றில் புதுவிதமான ஒரு காய்ச்சல் சமீபத்தில் பரவியது பலருக்கும் நினைவிருக்கலாம். "சார்ஸ்" என்று இந்த நோய்க்கு பெயர்வைத்திருந்தார்கள். இந்த நோய் பரவிய வேகத்தில் இந்த நாடுகளில் பல உயிர்கள் பலிகொள்ளப்பட்டன. இந்த நோய்கண்ட நாடுகளுக்கு வேறு நாடுகளில் உள்ளவர்கள் பயணம் செய்யக்கூடாதென்றும் இந்த நாடுகளில் உள்ளவர்கள் வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளக் கூடாது என்றும் உலகசுகாதார அமைப்பு தடைவிதித்திருந்தது.

சீனாவிலும் இந்தநோய் பரவி முந்நூறு பேருக்கு மேல் மாண்டுபோயினர். வேறு சில நாடுகளிலும் இந்நோய் பரவியது. உயிர்ப்பலி எடுத்தது. இந் நோய் கட்டுப்படுத்தப்பட்டது. புதிய மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டன. நோய்கண்ட நாடுகளில் இந்நோய் பரவுவது தடுக்கப்பட்டு விட்டதென்றும், இனி அது பரவும் ஆபத்தில்லை என்றும், உலக சுகாதார அமைப்பு தெளிவுபடுத்தி அனுமதி வழங்கிய பின்னர்தான் இந் நாடுகளுக்கும் பயணம் செய்ய அனுமதி கிடைக்கும்.

இந்நோய் இலங்கையில் வராமலும், பரவாமலும் தடுக்கப்பட்டது பாராட்டுக்குரியது. பாவம் சார்ஸ் என்ற பயத்தினாலேயே வெறும் வதந்தியால் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் ஒரு அப்பாவிப்பெண் உயிரிழக்க நேர்ந்தது.

இந்த பயங்கரமான சார்ஸ் நோய் முதலிலும் சீனாவில்தான் உற்பத்தியானதாம். இப்போது மீண்டும் இந்த நோய் கண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பொல்லாத நோய் காட்டு, வீட்டு மிருகங்களால் பரவுவதாக கண்டுபிடித்திருக்கிறார்களாம். இதனால், பூனைகள் ஆயிரக் கணக்கில் கொன்றொழிக்கப்படவிருப்பதாகவும், ஒரு செய்தி கூறுகிறது.


பூனை எலி பிடிக்கும் என்றால் பூனையைப் பிடிக்கும் சார்ஸ் நோய் எலிகளைப் பிடிக்காதா?

இப்போது எலிகளாலும் சார்ஸ் பரவுகிறது என்று எலிகளையும் லட்சக் கணக்கில் கொன்றொழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதாம்.

எலிகள் மட்டுமா கரப்பான் பூச்சிகளையும் ஒழிக்க திட்டம் தீட்டப்படுகிறது.

நம்ம நாட்டில் நுளம்புத்தொல்லையை எப்போது ஒழித்துக்கட்டப்போகிறோம். ஈ என்ற இலையான்களை எப்போது ஒழிப்போம்! எலி பூனைகளைப் பற்றி சார்ஸ் வந்தால்தானே சிந்தனைவரும்!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



நாற்சந்தி

'யானை யாரிடமுள்ளதோ... அவரிடந்தான் அங்குசமும் இருக்கவேண்டும் அல்லது அங்குசம் யாருக்குரியதாக உள்ளதோ அவரே யானையையும் வைத்துக்கொள்ளவேண்டும்...'

'என்ன மணியண்ணை உனக்குள்ளே நீயே ஏதோ தத்துவம் பேசிக்கொண்டிருக்கிறாய்...?

'இது தத்துவமில்லை... ரணில் ஐயா சொல்லியிருக்கிற கருத்து கனகண்ணை... அதாவது பாதுகாப்பு அமைச்சு ஆரிட்டை இருக்கோ அவர்தான் சமாதானப் பேச்சையும் பொறுபபேற்கவேண்டும்... அல்லது சமாதானப் பேச்சை ஆர முன்னெடுக்கிறாரோ அவரே பாதுகாப்பு அமைச்சையும் வைத்திருக்கவேண்டும்... விளங்குதோ...?

'விளங்குது விளங்குது இதை நேரடியா நினைச்சமாதிரி சொல்லலாமே... ஏன் சுத்திவளைச்சு கதைசொல்லி விளக்கவேண்டும்...'

'சும்மா ஒரு அழகுக்குத்தான்... இப்ப அவர் இப்படிச் சொல்லுறதன் மூலம் போர்நிறுத்த உடன்பாட்டைப் பாதுகாக்க தன்னால் முடியாதென்றும், அதற்கான அதிகாரம் சந்திரிகாவிடந்தான் இருக்கிறது எனவே அவர்தான் அதைப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் சொல்லப்போகிறார் போலிருக்கு...'

'பிறகென்ன...போலிருக்கு... என்று இழுக்கிறாய்... சொல்லிப்போட்டார் என்றே சொல்லன்...'

"ஓமோம்... இதை அவர் சர்வதேச சமூகத்திற்கு குறியீடாக உணர்த்திவிட்டார் போலிருக்கு... இனி என்ன நடக்கப்போகுதோ...!'

'என்ன நடக்கும்...? ஒன்றும் நடக்காது...! ரணில் இப்பிடிச் சொன்னதற்கு சந்திரிகாவும் ஏதோ ஒன்றைச் சொல்லத்தானே வேண்டும்...!

'எப்படி...?

'யானை நல்ல யானையாக இருந்தா ரணிலுக்கு அங்குசம் தேவையில்லை... அவருக்கு தான் வைத்திருக்கும் யானையில் சந்தேகம். அது தான் அங்குசத்திற்கு அவதிப்படுகிறார் என்று சொன்னாலும் சொல்வார்...'

"அதுக்குப்பேர்தான் அரசியல்... அதாவது இலங்கையின் அரசியல்"

தெருவாசி

# அமைச்சுக்களை ஒப்படைக்கத் தவறின் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும்!

## ஜனாதிபதியிடம் பிரதமர் வேண்டுகோள்

பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதியின் தீர்மானத்தினை வாபஸ் பெறாவிட்டால் சமாதான நடவடிக்கைகளையும் ஜனாதிபதி பொறுப்பேற்க முன்வர வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பண்டுவஸ்நுவர என்ற இடத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் குறிப்பிட்டதாவது-

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் செய்து கொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் அதில் இடம்பெறும் 4 ஆம் சரத்தின் படி 2 ஆவது பிரமாணத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களின்படி ஜனாதிபதி சமாதானப்பேச்சுக்களை முன்னெடுக்கக் கூடியதாக உள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்ந்து அமுலில் இருப்பது அவசியமானதாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அரசாங்கத்திற்கு பாதுகாப்புத்துறையில் உள்ள அதிகாரங்களைப்பற்றி விடுதலைப்புலிகள் நோர்வே அரசாங்கத்தின் ஊடாக கேட்டிருந்தனர்.

அவ்வேளை மக்கள் ஆணையைப் பெற்ற அரசாங்கம் என்னும் ரீதியில் எம்மிடம் அதிகாரம் உண்டென அவர்களிடம் தெரிவித்திருக்கிறோம்.

பின்னர் விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டது.

தற்போது பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் மூலம் சமாதானத்தை தொடர்ந்து முன்னெடுக்க முடியாதநிலை தோன்றியுள்ளது. எனவே ஜனாதிபதியே சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது பொருத்தமானதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சமாதான...

வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் சந்தித்து, தடைபட்டுப்போயுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுப்பது தொடர்பாக பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### அமெரிக்க...

பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்த கருத்தை வன்மையாகக் கண்டித்த ஜே.வி.பி நாட்டின் உள்விவகாரங்களில் தேவையற்ற விதத்தில் அமெரிக்கா தலையிடக்கூடாதெனவும் தெரிவித்திருந்தது. இந்தப் பின்னணியில் அமெரிக்க அதிகாரிகளின் விஜயம் முக்கியத்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதியும்..

அது பாரிய பிரச்சினையை உண்டு பண்ணும்.

ஜனாதிபதியும், பிரதமரும் ஒன்றிணைந்தே தற்பொழுது எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமே தவிர முரண்பட்டுக் கொள்ளக் கூடாது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து அரசு விலகாது என்ற நம்பிக்கையிலேயே பொதுமக்கள் உள்ளார்கள். மக்களின் எதிர்பார்ப்புக்களை மக்கள் ஆணையைப் பெற்ற அரசாங்கம் உதாசீனம் செய்து விடக் கூடாது.

தமிழ் மக்களின் அவல வாழ்வும் சிங்கள மக்களின் சீரழிந்த வாழ்வும் மாறவேண்டுமானால் சிங்களத் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகளுடனான...

அரசு - புலிகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஒருதரப்பு உடன்பாட்டில் இருந்து விலகிக்கொள்வதாக இருந்தால் மறுதரப்புக்கு அது குறித்து இருவாரங்களுக்கு முன்னரே தெரியப்படுத்தவேண்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முடிவு குறித்து ஜனாதிபதி செயலகம் கருத்து வெளியிடுகையில், போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

போர்நிறுத்தத்துக்காக மக்களின் ஆணையை அரசாங்கம் பெற்றுள்ளது. இதனால் அதனைத் தொடர வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உள்ளது எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# கொழும்பு நகரப்பகுதியில் இந்திய விமானப்படை முகாம்

## அமைக்கக் கோருகிறார் சுப்பிரமணியசுவாமி

கொழும்பில் இந்திய இராணுவ முகாமும், ஆகாயப்படை முகாமும் அமைக்கப்படவேண்டும் என இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியசுவாமி, இந்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கு நேரடியாக விடுத்துள்ள கோரிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியக் கடலெல்லைப் பாதுகாப்பு மற்றும் இந்திய கடற்படையின் நிலைப்பாடுகள் குறித்து சுப்பிரமணியசுவாமி, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னான்டஸுடன் பேச்சுவார்த்தை நடாத்திய போது, இந்தியாவின் முழுமையான பாதுகாப்பிற்கு முன்னோடியாக, இலங்கையின் தலைநகரான கொழும்பில், உடனடியாக இரண்டு இந்திய இராணுவ முகாம்களையும், ஒரு இந்திய விமானப்படை முகாமையும் அமைக்கவேண்டியது அவசியம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடுவதாக இருந்தால், அதற்கு முன்னர் இந்த மூன்று முகாம்களும் கொழும்பில் அமைவது அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கை பிரச்சினை...

னேறியுள்ளன. இதில் குறிப்பாக பாதுகாப்பும், வர்த்தகமும் அடங்கும். இந்தியாவிற்கும் - இலங்கைக்குமிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கூட எமது திருப்திக்கேற்றவாறு நன்றாகவே உள்ளன.

ஜனாதிபதி பிரேமதாஸா காலத்தின் பின் இலங்கை மீதான "பார்த்துக்கொண்டிருத்தல்" நிலைப்பாடு இந்தியாவிடம் மாறியுள்ளது. தற்போது புதுடெல்லியில் ஒரு மாற்றம் வந்துள்ளது.

இந்திய அமைதிப் படையின் அனுபவத்தின் பின்னர் இந்தியா மிகவும் அவதானமாகவும், மெதுவாகவும் தனது அணுகுமுறையை கொழும்புடன் மேற்கொண்டுவருகிறது.

கடந்த பத்து வருடங்களில் இந்தியா சமாதான முயற்சிக்கு சார்பாக நடந்து வருகிறது. இனப்பிரச்சினை தொடர்பான எமது சமரச முயற்சிக்கு இந்தியா எமது நிலைப்பாட்டைப் போன்ற நிலையிலேயே எமக்கு ஆதரவைத்தருகிறது. இருந்தும் இது சற்றுக கூடுதலாக இருப்பதாகவே நான் கருதுகிறேன் எனவும் தெரிவித்தார்.

# தனியார் பஸ் உரிமையாளர்கள் திங்கள்முதல் வேலைநிறுத்தம்!

தனியார் பஸ் உரிமையாளர்கள் அடுத்தவாரம் வேலைநிறுத்தப் போராட்டத்தினை நடத்தவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் தனியார் பஸ் உரிமையாளர்கள் விடுத்த அறிக்கையிலேயே எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளவிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பஸ்களுக்கான 15 சதவீதக் குத்தகைவரியை அரசாங்கம் விலக்கிக்கொள்ளாவிட்டால், இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளவிருப்பதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்திருக்கிறது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை அரசாங்கத்துக்கு காலக்கெடு வழங்கப்பட்டிருக்கிறது. 90 வீதத்துக்கு அதிகமான பஸ் உரிமையாளர்கள் அவற்றை குத்தகைக்கு பெற்றுள்ளனர். இம்மாதம் முதல் அரசாங்கம் 15 வீத வரி விதிப்பதால் பஸ் உரிமையாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# பிரதமரின் அறிவிப்பு...

கிடைத்திருப்பதாகத் தெரிவித்தே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார்.

இனிமேல் மக்கள் ஆணை தமக்கு இல்லை எனக்கருதியா புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கத் தீர்மானித்துள்ளார் என்ற கேள்வி எழத்தோன்றுகின்றது.

பிரதமர் தமது பொறுப்புவாய்ந்த சமாதான முயற்சியிலிருந்து பின் வாங்கக்கூடாது சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டில் நிம்மதியை உருவாக்குவேன் என்று கூறிச் செயற்பட்டு வந்த ஓர் தலைவர் வெறும் அமைச்சுப்பதவிக்காகத் தனது பணியிலிருந்து பின்வாங்குவது என்பது இலங்கையின் அரசியல் சீர்குலைவை முழு உலகத்திற்கும் வெளிப்படுத்துவதாக அமையும்.

பல்வருடங்களாக நடந்து வந்த கொடூர யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படுவதற்கு அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டிய வேளையில் பிரதமர் மேற்கொண்டுள்ள தீர்மானம் சமாதானம் பற்றிய நம்பிக்கையைத் தகர்ப்பதாக அமைந்துள்ளது.

ஜனாதிபதியால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இச்சமாதான முயற்சியைத் தொடர்வதற்கு ஜனாதிபதியும், அவரது கட்சி அங்கத்தவர்களும் இலங்கை மக்களும் ஒற்றுமையாக ஆதரவு வழங்கத் தயாராக உள்ளனர் என்பதை பிரதமர் உணர்ந்து செயற்படவேண்டும் என அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

# ரணில் எடுத்திருக்கும்...

இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையில் தொடர்புகள் மிகவும் பழைமை வாய்ந்தன. இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளில் நோர்வே தொடர்ந்தும் தனது பங்களிப்பை வழங்கும்.

புரிந்துணர்வின் அடிப்படையிலேயே நிரந்தர சமாதானத்தினை ஏற்படுத்தமுடியும். இதற்கு மக்கள் மத்தியில் சமாதானம் பற்றிய விழிப்புணர்வு வளர்ச்சி அடைய வேண்டும்.

தற்போது நிலவி வரும் அரசாங்க ஆட்சியாளரிடையிலான முட்டுக்கட்டைகள் நீங்கி பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட சாத்தியக்கூறுகள் உள்ளன. பேச்சுக்கள் மீண்டும் தொடரும் என்பதில் நோர்வே உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. இன்று (நேற்று) வெளிவரும் தகவல்களின்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சிலிருந்து வெளியேறவுள்ளதாகவும், விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு உடன்பாட்டை கைவிடப்போவதாகவும் அவர் அறிவிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

இது எமக்கு அதிர்ச்சியை அளிக்கிறது. அவ்வாறு புரிந்துணர்வு உடன்படிக்கை கைவிடப்படுமானால் இலங்கையின் சகல கட்டுமானங்களும் பாரிய அழிவுகளைச் சந்திக்க நேரிடும்.

இதனால் அரச தரப்பினர் அக்கறையுடன் செயற்பட்டு சமாதானத்திற்கான முயற்சியை மேற்கொண்டு அதனூடாக இலங்கையில் மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழவழி செய்யவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1579 திகதி: 06.01.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| W | 3 | 9 | 5 | 0 | 6 | 9 |

பதவி வெற்றிடம்

☆ சிற்றூழியர் (ஆண்கள் மட்டும்)
☆ பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள் மட்டும்)
☆ பக்க வடிவமைப்பாளர் – Page Maker (இருபாலாரும்)

மேற்படி விண்ணப்பங்களுக்கு தகுதியானவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் சான்றுப் பத்திரங்களுடன் 'நமது ஈழநாடு' அலுவலகத்திற்கு கடமை நேரத்தில் நேரடியாகச் சமுகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்
நமது ஈழநாடு
இல, 267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

A/L 2006
கலை, வர்த்தகப் பிரிவுகள்
(சி-2058)
DMI யாழ்.நகர்
ஜனவரி 10 சனி காலை 8 மணி

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.